பர்த்ருஹரி அருளிய

நீதி சதகம்

ப்ரக்ஞன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	நீதி சதகம்
ஆசிரியர்	:	ப்ரக்ஞன்
வெளியீடு	:	பராபரம்
வகை	:	உபதேசம்
முதற்பதிப்பு	:	2025
பக்கங்கள்	:	69
விலை	:	அக விழிப்பு
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்

பர்த்ருஹரி அருளிய

நீதி சதகம்

தெளிவுரை

ப்ரக்ஞன்

பர்த்ருஹரி அருளிய

நீதி சதகம்

சமஸ்கிருதத்தில் கவி காளிதாசருக்கு இணையாக மஹாகவியாக போற்றப்படுபவர் பர்த்ருஹரி. இவர் எழுதிய 300 ஸ்லோகங்களை '**த்ரிசதி**' என அழைப்பார்கள். அவைகளை சுபாஷிதம் என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படும். சுபாசிதம் என்றால் **சுபம் + பாஸா** என்ற கூட்டு சொல் சுபாசிதம் எனப்படும். நல்ல மங்களமான வார்த்தைகள், நல்ல அறிவுரைகள் எனலாம். இவர் எழுதிய மூன்று நூல்களையும் "**சதக த்ரயம்**" என்றும் கூறலாம்.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் போல, இவரது 300 பாடல்களையும், தலா 100 பாடல்கள் வீதம், **நீதிசதகம், சிருங்கார சதகம், வைராக்கிய சதகம்** என்னும் மூன்று பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பர்த்ருஹரி பற்றியும், அவருடைய படைப்புகளைப் பற்றியும் வலுவான வரலாற்று ஆதாரங்கள் பெரிதாகக் கிடைக்கவில்லை என்றாலும், ஒரு சில வரலாற்றுக் குறிப்புகளில் பர்த்ருஹரி என்பவர் உஜ்ஜயினியின் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் என்றும், வடநாட்டில் பிரசித்திபெற்ற மன்னன் விக்ரமாதித்தியனின் சகோதரர் என்றும் சொல்லப்படுகிறது.

பர்த்ருஹரியின் காலம் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டிலிருந்து, 4 – ஆம் நூற்றாண்டுக்குள் இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உஜ்ஜையினி என்று நம்மால் இப்போது அழைக்கப்படுகின்ற அருமையான நகரம் அன்றையக் காலங்களில் '**அவந்திகா**' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. அதிலே, **மால்வா** என்ற பகுதி அவந்திகா நாட்டிலுள்ள ராஜ்ஜியத்தின் தலைநகரம் ஆகும்.

மிகவும் செல்வ செழிப்புள்ள அவந்திகா நகரம் அன்றைய அரசன் விக்ரமாதித்தன் என்பவரால் ஆளப்பட்டது. இவரை இரண்டாம் **சந்திரகுப்தர்** என்று வரலாற்றில் பார்க்கின்றோம். இவர் கி.பி.388 முதல் கி.பி.409 வரை, தற்போதைய மும்பை (பம்பாய்) நகருக்கு வடக்கே உள்ள குஜராத்தில், அதாவது மேற்கு இந்தியாவில் சௌராஷ்ட்ரா (இப்போது சௌராஷ்டிரா) மற்றும் உஜ்ஜைனைத் தலைநகராகக் கொண்ட **மால்வா** என்ற ராஜ்ஜியத்தை தலை நகரமாகக் கொண்டு ஆண்ட அரசன்தான் இந்த '**விக்கிரமாதித்யா**' என்ற இரண்டாம் சந்திரகுப்தர் ஆவார்.

இவரது புத்தி சாலித்தனத்தையும், பெருமையையும் போற்றும் விதமாக, அம்புலிமாமா கதைப் புத்தகத்தில் வருகின்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது என்றும், மன்னன் விக்கிரமாதித்தன் அதை கீழே இறக்கி தனது நாட்டிற்கு தூக்கிச் செல்லும்போது, அந்த வேதாளம் கதை சொல்லி, விடுகதை போடும் என்றும், அதற்கான விளக்கம் மிகச் சரியாக மன்னன் விக்கிரமாதித்யனால் கொடுக்கப்பட்டாலும், அந்த வேதாளம் அதை ஏற்றுக் கொள்ளாமல் மீண்டும் முருங்கை மரம் ஏறிக் கொள்ளும் என்றும், "தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தில் ஏறி.... என்று அம்புலிமாமா கதை சுவாரஸ்யமாக இருக்கும். அந்த வேதாளம் கதையில் வருகின்ற விக்கிரமாதித்யன் என்ற அரசன் இரண்டாம் சந்திரகுப்தர் என்ற மன்னனே ஆவார்.

இந்த இரண்டாம் சந்திரகுப்தர் எனும் விக்கிரமாதித்யா அரசனின் சகோதரராக இருந்தவர்தான் இந்த **பர்த்ருஹரி** என்ற அரசனும் ஆவார்.

சுபாஷிதம் (சதக த்ரயம்) எழுதிய பர்த்ருஹரி, வாக்யபதீயம் எழுதிய பர்த்ருஹரி, பட்டி காவியம் எழுதிய பட்டிதான் பர்த்ருஹரி, மால்வா நாட்டின் மன்னன்தான் பர்த்ருஹரி என பலவிதமாகக் குறிப்பிடப்படுகிறார்.

அனைவரும் ஒருவரா? அல்லது வெவ்வேறானவரா? என இன்னும் தெளிவாக எதிலும் சொல்லப்படவில்லை. அவர் யாராக வேண்டுமனாலும் இருக்கட்டும், நமக்கு அவரது ஆழமான கருத்துக்களைக் கொண்ட இந்த அருமையான **"நீதி சதகம்"** எழுதிய முறையில் ஒரு மிகச் சிறந்த கவிஞன் என்பதாக பர்த்ருஹரியைப் பற்றி நாம் புரிந்துக் கொள்ளலாம்.

பொதுவாக, கவிஞர்கள் வடமொழியிலே மிக உயர்ந்த விசயங்களை சூத்திரத்தில் மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறும்போது, அவைகள் அறநெறியை கொண்டதாகவும், ஆழமான உட்பொருளை உள்ளடக்கியதாகவும், புதுமையானதாகவும் கொடுப்பதற்காக பல்வேறு உவமானங்களை எடுத்து கையாளுவார்கள்.

அதிலே, பர்த்ருஹரி எழுதிய **நீதி சதகம், சிருங்கார சதகம், வைராக்ய சதகம்** ஆகிய மூன்று சதகங்களும் **"சுபாஷிதம்"** என்ற பெயரில் அறியப்படுகின்றன. இவைகள் மூன்றுமே சமஸ்கிருத மொழியில் உள்ளன.

நீதி சதகம்:

வாழ்க்கையில் வெற்றி பெறவும், நற்பழக்கங்களைக் கடைபிடிக்கவும் உதவும் கருதுள்ள பாடல்களின் தொகுப்பு.

சிருங்கார சதகம்:

காமம், காதலால் ஏற்படும் உணர்வுகளைப் பற்றிய பாடல்களின் தொகுப்பு.

வைராக்ய சதகம்:

துறவு, ஆன்மீகப் பயணத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் பாடல்களின் தொகுப்பு.

சுபாஷிதம் என்ற நல்லுரையை இந்தியக் கவிகள் எடுத்துக் கூறும்போது, அவர்களது வாழ்க்கையில் பட்ட அனேக அநுபவங்களை எல்லாம் எளிய சூத்திரங்களாக சில வரிகளில் மக்களுக்கு புரிய வைக்க முயற்சித்திருக்கின்றார்கள் என பார்க்க முடிகின்றது.

அவைகளில், நீதியுரைகளை அறியாதவர்களை, கல்வியற்ற மூடர்கள் எனக் கருதப்பட்டது. இந்த **நீதி சதகம்** என்ற சுபாஷிதமும் இதை வலியுறுத்துகிறது.

"சுபாஷிதமறியாத நாக்கு நாக்கல்ல, அது காக்கைக்குப் பயந்து வாயிலே ஒளித்து வைத்திருக்கும் ஒரு மாமிசத்துண்டு" போன்றது என்கின்றனர் நம் முன்னோர்கள். அதாவது, அதை நாக்கு என்பதாகப் பார்க்காமல், மாமிசத் துண்டு என்பதாகப் பார்க்கின்றனர்.

காதலும், துறவும் இன்பத்தை அடைவதற்கான இரண்டு வழிகள் என்பதே பர்த்ருஹரியின் சித்தாந்தம்.

இதிலே, ஒன்று பிரவிருத்தி மார்க்கம். மற்றது நிவிருத்தி மார்க்கம்.

பத்ருஹரியின் வாழ்க்கையில் நடைப்பெற்ற மிகவும் சுவாரஸ்யமான கதையைப் பார்த்துவிட்டு, அதன்பிறகு, அவரது ஆழமான நீதி சதகம் என்ற நூலைப் பார்க்கலாம்.

மாம்பழம் தந்த மஹா தத்துவம்

பர்த்ருஹரி என்ற இந்த அரசருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருவள் அழகி பிங்களா என்பவள் ஆவாள். இவளால்தான் இந்த அரசன் பர்த்ருஹரி இந்த ஆடம்பர அரச வாழ்க்கையான ப்ரவிருத்தி வாழ்க்கையை துறந்து, முற்றும் துறந்த சந்நியாஸி வாழ்க்கையாகிய நிவிருத்தி வாழ்க்கைக்கு எப்படி வந்தார்? என்பதுப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதை உள்ளது.

அந்த கதையைப் பார்த்துவிட்டு, பிறகு அவரது கவிதைகளைக் காணலாம்.

பர்த்ருஹரி மிகச்சிறந்த ஒரு நீதிமான்.

பர்த்ருஹரியின் அழகிய மனைவி பிங்களா. ஒரு நாள் ராஜா பர்த்ருஹரியைப் பார்க்க ஒரு யோகி அரண்மனைக்கு வந்தார். அப்படி வந்தவர் அரசன் பர்த்ருஹரியிடம் ஒரு மாங்கனியைக் கொடுத்து, இது தேவலோக கல்பவிருக்ஷத்தின் கனி.

இந்தக் கனி விரும்பியதை எல்லாம் அளிக்க வல்லது. உனக்கு என்றும் இளமை, ஆரோக்கியம், நீண்ட ஆயுள் எல்லாம் தரும். இதை அரசனாகிய தங்களுக்கு அளிப்பதினால், இந்த நாடும், நாட்டு மக்களும் சுபிக்ஷமாக வாழ்வார்கள் என்றே இதைக் கொண்டு வந்தேன் எனக்கூறி அந்தக் கனியை அரசன் பர்த்ருஹரியிடம் அந்த சந்நியாஸி கொடுத்தார்.

அரசன் பர்த்ருஹரி அந்தக் கனியைப் பெற்றுக் கொண்டு, அந்த சந்நியாஸியை வழி அனுப்பி வைத்துவிட்டு, அவரது இரண்டு மனைவிகளான அநங்கசேனா, என்றும் பிங்களா ஆகிய ராணிகளில், தனது ஆசை மனைவியான பிங்களா என்பவளிடம் இந்த பழத்தைக் கொடுத்து, இதன் உயரிய விசயத்தை எடுத்துக் கூறி, இந்த பழத்தை நீ மட்டுமே சாப்பிடு! இதனால், **"என் ராணி என்றும் இளமையோடு, நீண்டகாலம் வாழ்ந்துக்கொண்டு என்னை எப்போதும் மகிழ்வித்துக் கொண்டிருக்க வேண்டும்"** எனவே, நீ இந்த பழத்தை சாப்பிடு என்று கொடுத்தான்.

ஆனால், அந்த இளைய ராணிக்கு மஹிபாலன் எனும் ராஜாவின் குதிரைப் படைக் காவலன் ஒருவன்மீது, கள்ளக் காதல் கொண்டிருந்தாள். அதனால், அவளது அரசன் ஆசை, ஆசையாகக் கொடுத்த அந்த பழத்தைக் கொண்டு சென்று, அவளது ஆசை நாயகனாகிய மஹிபாலன் என்பவனிடம் "என் அன்பே இது உனக்கு சேரவேண்டிய சிரஞ்சிவிப் பழம். இதை உண்டால், நீ மரணமின்றி வெகு நாட்கள் வாழலாம். அவ்வாறு நீ வாழ்வது மட்டுமே எனக்கு மகிச்சியைத் தரும் என்று கூறி, அந்த ராணி பிங்களா குதிரைப்படைக் காவலனாக இருக்கும் தன்னுடைய காதலனுக்கு அந்த சிரஞ்சீவிப் பழத்தை தந்தாள்.

ஆனால், அந்த மஹிபாலன் எனும் குதிரைப் படைக் காவலனோ? அதே அரண்மனையில் வேலைக்காரியாக இருந்த லேகா என்ற பெண்ணை விரும்பினான். அவனது காதலை இன்னும் வலுப்படுத்த, இந்தப் பழம் உதவும் என நினைத்த குதிரைப்படை காவலன் அந்தப் பழத்தின் பெருமையை அவனது காதலியிடம் கூறி, பழத்தை அவளிடம் தந்தான்.

லேகா என்ற அந்த வேலைக்காரி அரண்மனை விசுவாசி என்பதினால், இந்தப் பழத்தை அரசருக்கு தர வேண்டும் எனக்கருதினால், அதன் வாயிலாக அரசரின் பாராட்டுதல்களைப் பெறலாம் என எதிர்ப்பார்த்தால், வழக்கம்போல அன்றும் அவள் அரண்மனை வேலையாக இருந்த பொழுது, அங்கு வந்த ராஜா பர்த்ருஹரியை சந்தித்து, அந்த சிரஞ்சீவி பழத்தை அரசர் உண்டால், அவர் நீண்ட நெடு நாட்கள் இந்த ராஜ்ஜியத்தை ஆளலாம் எனக்கூறி, அந்த மாம்பழத்தை அவரிடம் கொடுத்தால். அந்த பழத்தைப் பெற்றுக்கொண்ட அரசன் பர்த்ருஹரி அது அவளுக்கு எப்படி கிடைத்தது என்று கேட்டான்.

லேகா **"இதை யார் உனக்கு கொடுத்தது?"**

"அரசே இது எனக்கு ஒரு கோவில் பூஜையில் கிடைத்தது?" என்றாள்.

அரசன் பர்த்ருஹரிக்கு அனைத்தும் புரிந்துவிட்டது.

அரசனுக்கு கோபம், அருவருப்பு, வெறுப்பு, ஏமாற்றம், ஆத்திரம் என எல்லாமே அவன் மனதை நிரப்பியது.

உடனடியாக தனது ஆசை ராணியை கூப்பிட்டு அனுப்பினான்.

அந்த பிங்களா என்ற ராணியை விசாரிக்கும் விதத்தில் அரசன் பர்த்ருஹரி விசாரித்தான். அந்த ராணி வாயிலாக, அரசவைக் குதிரைப்படை காவலன் மஹிபாலன் மற்றும் அவனது காதலி லேகா என எல்லோருக்கும் பழம் கைமாறியது கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களுடைய எண்ணங்களும் அரசனுக்கு புரிந்தது.

உடனே அரச உத்தரவு பறந்தது. ராணி, மற்றும் மஹிபாலன் இருவருக்கும் மரண தண்டனை கொடுக்கப்பட்டது. ஆசை மனைவியின் அந்த துரோகத்தை அரசனால் தாங்க முடியவில்லை. மிகுந்த மனவேதனை அடைந்த பர்த்ருஹரி அப்போதே தனது அரசாங்கம், ஆட்சி என அனைத்தையும் துறந்தான். அந்த ராஜ்யத்தை வெறுத்தான். துறவறம் பூண்டான். தனது தம்பி விக்ரமாதித்தியனை அந்த நாட்டிற்கு அரசனாக அமர்த்தினான்.

இவ்வாறு துறவியாக மாறிய அரசன் பர்த்ருஹரியின் அனுபவங்களே அவரது ஆழமான கவிதைகளாக வெளிப்பட்டன.

नीति शतकं

(நீதி சதகம்)

दिक्कालाद्यनवच्छिन्नानन्त चिन्मात्र मूर्तये /
स्वानुभूत्येकमानाय नमः शान्ताय तेजसे // 1.1 //

திக்காலா**த்**யனவ**ச்சி**ன்னானந்த சின்மாத்ர மூர்தயே |
ஸ்வானு**பூ**த்யேகமானாய நம: சாந்தாய தேஜஸே || 1.1 ||

தெளிவுரை:–

கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டு, எல்லையற்றதாக இருக்கின்ற தூய அறிவு ஒளி மாத்திரமாக உள்ள உம்முடைய அருளால், ஒருவரது உள்ளத்தில் அமைதியும், ஆனந்தமும் உணரப்படுகின்ற சுவானுபூதிக்கு, அறிவு ஒளிப் பிரகாசத்திற்கு வந்தனம். வணக்கங்கள்.

यां चिन्तयामि सततं मयि सा विरक्ता
साप्यन्यमिच्छति जनं स जनोऽन्यसक्तः /
अस्मत्कृते च परिशुष्यति काचिदन्या
धिक् तां च तं च मदनं च इमां च मां च // 1. 2 //

யாம் சிந்தயாமி சததம் மயி ஸா விரக்தா
சாப்யன்யமிச்சதி ஜனம் ச ஜனோ(அ)ன்ய ஸக்த: |
அஸ்மத் க்ருதே ச பரிசுஷ்யதி காச்சி**த**ன்யா
திக் தாம் ச தம் ச ம**த**னம் ச இமாம் ச மாம் ச || 1.2 ||

தெளிவுரை:–

நான் காதலிக்கும் பெண்ணின் இதயத்தில் என் மீது காதல் இல்லை. ஆனால் அவள் வேறொருவரை நேசிக்கிறாள். அந்த நபரோ இன்னொருத்தியை நேசிக்கிறார். என்னை நேசிக்கும் பெண்ணின் மீது, என் இதயத்தில் எந்த பாசமும் இல்லை. நான் அவர்கள்

எல்லாரையும், ஏன் என்னையும் சேர்த்து வெறுக்கிறேன். நான் இதைப் பற்றி தொடர்ந்து யோசித்துக்கொண்டிருக்கிறேன். இது பர்த்ருஹரி பற்றற்ற நிலைக்கு தள்ளப்பட்டதற்கான முதல் மந்திரம்.

अज्ञः सुखमाराध्यः सुखतरमाराध्यते विशेषज्ञः ।
ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रञ्जयति ॥ 1.3 ॥

அஜ்ஞ: ஸுக**ம்** ஆரா**த்**ய: ஸுக**த**ரம் ஆரா**த்**யதே விஸேஷஜ்ஞ: |
ஜ்ஞானலவ**துர்**வி**தக்த**ம் **ப்**ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி // 1.3 //

Ajjnah sukhamaaraadhyah sukhataramaaraadhyate visheshajjnah.
Jnaanalavadurvidagdham brahmaapi naram na ranjayati 1.3

தெளிவுரை:–

அறியாதவன் எளிதில் சுகத்தை அடைகின்றான். உண்மையிலேயே அறிவுள்ள ஞானி சுகத்தை இன்னும் எளிதாக அடைகின்றான். ஆனால், அரைகுறை அறிவைக் கொண்டு, நான்தான் உலகிலேயே மிகவும் புத்திசாலி என்று நினைக்கும் ஒரு முட்டாளைப் படைப்பாளரால் கூட அவ்வளவு எளிதல் சுகத்தை அடைய வைக்க முடியாது. ஏனென்றால், முழுமையற்ற அறிவு ஒருவரை ஆணவத்திலும் தர்க்கத்திலும், குருடனாக ஆக்குகிறது.

இந்த உலகில் மூன்று வகையான மக்கள் உள்ளனர் – அறியாமை கொண்டவர்கள், அறிவாளிகள் மற்றும் முட்டாள்கள். அறியாமை கொண்டவனிடம் நம் கருத்துக்களை புரிய வைக்க சற்று சிரமப்பட்டு புரிய வைக்க வேண்டும். அதுவே, ஒரு அறிஞரிடம் நாம் கூறவருகின்ற கருத்தை சிரமமே இல்லாமல், மிகச் சிறப்பாகவும், எளிதாகவும் புரிய வைத்து விட முடியும். ஆனால், ஒரு முட்டாளிடம் மிகத்தேர்ச்சி பெற்ற, புலமைப் பெற்ற பெரிய, பெரிய பண்டிதர்களால்கூட சொல்ல வருகின்ற கருத்தை விளக்கவோ, புரிய வைக்கவோ முடியவே முடியாது.

प्रसह्य मणिमुद्धरेन्–मकर वक्त्र दंष्ट्रान्तरात्
समुद्रमपि सन्तरेत्–प्रचलद्–ऊर्मिमालाकुलम् ।
भुजङ्गमपि कोपितं शिरसि पुष्पवद्धारयेत्
न तु प्रतिनिविष्ट–मूर्खजन चित्तमाराधयेत् ॥ 1.4 ॥

ப்ரஸஹ்ய மணிம் உ**த்த**ரேன்மகரவக்த்ர**த**ம்ஷ்ட்ராந்தராத்
ஸமு**த்**ரம் அபி ஸந்தரேத்ப்ரசல**தூர்**மிமாலாகுலம் /
புஜனகம் அபி கோபிதம் சிரஸி புஷ்பவ**த்தா**ரயேத்
ந து ப்ரதினிவிஷ்ட மூர்க **ஜ**ன சித்தம் ஆரா**த**யே**த்** // 1.4 //

தெளிவுரை:–

மனிதனால் சாத்தியமற்றதைக் கூட சாத்தியமாக்க முடியும். ஆனால், ஒரு முட்டாளுக்கு மட்டும் எதையுமே அவ்வளவு எளிதாக சாத்தியமாக்க முடியாது.

அதாவது, ஒரு மனிதன் ஒரு முதலையின் வாயிலிருந்து ஒரு ரத்தினத்தை எடுக்க முடியும். கொந்தளிப்பான கடலைக்கூட எளிதாகக் கடக்க முடியும், ஒரு கோபமான பாம்பைக் கூட எளிதாக தலையில் வைத்திருக்க முடியும். ஆனால், ஒரு சார்புடைய மனிதர்களிடம் மட்டும் எவ்வளவு மகத்தான விசயங்களை எடுத்துச் சொன்னாலும் அவர்கள் அதை ஏற்க மாட்டார்கள்.

लभेत सिकतासु तैलमपि यत्नतः पीड्यन्–
पिबेच्च मृगतृष्णिकासु सलिलं पिपासार्दितः /
कदाचिदपि पर्यटन्–शशविषाणमासादयेन्–
न तु प्रतिनिविष्ट–मूर्खजन चित्तमाराधयेत् // 1.5 //

லபேத ஸிகதாஸு தைலம் அபி யத்னத: பீ**ட**யன்
பி**பே**ச்ச ம்ருக**த்**ருஷ்ணிகாஸு ஸலிலம் பிபாஸார்**தி**த: /
க்வசி**த**பி பர்யடன் ஸஸவிஷாணம் ஆஸா**த**யேந்
ந து ப்ரதினிவிஷ்ட மூர்**க ஜ**ன சித்தம் ஆரா**த**யே**த்** // 1.5 //

தெளிவுரை:–

ஒருவர் விடாமுயற்சியுடன் மணலில் இருந்து எண்ணெயைப் பிரித்தெடுக்கலாம். அல்லது தாகத்தால் துடிக்கும்போது கானல் நீரைக்கூட குடிக்கலாம். அல்லது பல இடங்களில் சுற்றித் திரிந்தாலும், ஒரு முயலின் கொம்பைக் கூடக் காணலாம். ஆனால் பிடிவாதக்காரர்களான முட்டாள்கள் இதயத்தை யாராலும் மகிழ்விக்க முடியாது.

व्यालं बालमृणाल–तन्तुभिरसौ रोद्धुं समुज्जृम्भते
छेत्तुं वज्रमणीं शिरीषकुसुमप्रान्तेन सन्नह्यते /
माधुर्यं मधुबिन्दुना रचयितुं क्षाराम्बुधेरीहते
नेतुं वाञ्छति यः खलान्पथि सतां सूक्तैः सुधास्यन्दिभिः // 1.6 //

வ்யாலம் **பா**லம்ருணாலதந்து**பி**ரஸௌ ரோ**த்து**ம் ஸமுஜ்ஜ்ரும்**ப**தே
சேத்தும் வஜ்ரமணிம் சிரீஷ குஸும ப்ராந்தேன ஸன்னஹ்யதி /
மா**து**ர்யம் ம**துபி**ந்**து**னா ரசயிதும் க்ஷாராமு**தே**ரீஹதே
நேதும் வாஞ்**ச**ந்தி ய: **க**லான்ப**தி** ஸதாம் ஸூக்தை: ஸு**தா**ஸ்யந்**திபி**: // 1.6 //

தெளிவுரை:–

தாமரை தண்டுகளின் மென்மையான இழைகளால் யானையைக் கட்ட முயல்பவன், பூவின் விளிம்பில் வைரங்களை வெட்ட ஆசைப்படுபவன் மேலும், ஒரு துளி தேனால் உப்பு நிறைந்த கடலை இனிப்பாக்க நினைப்பவன் எப்படி முட்டாளாக இருப்பானோ? அப்படியே நல்லவர்களின் அமிர்தம் நிறைந்த வார்த்தைகளைக் கொண்டு, தீயவர்களை நேர்வழியில் வழிநடத்த விரும்புபவனும் முட்டாளே.

स्वायत्तमेकान्तगुणं विधात्रा विनिर्मितं छादनमज्ञतायाः /
विशेषतः सर्वविदां समाजे विभूषणं मौनमपण्डितानाम् // 1.7 //

ஸ்வாயத்தம் ஏகாந்த**கு**ணம் வி**தா**த்ரா
வினிர்மிதம் **சாத**னம் அஜ்ஞதாயா: /
விஸேஷா அத: ஸர்வ வி**தாம்** ஸமாஜே
வி**பூ**ஷணம் மௌனம் அபண்**டி** தானாம் // 1.7 //

தெளிவுரை:–

தன்னிறைவு பெற்ற மற்றும் தனிமையான குணம் என்பது படைப்பாளரால் உருவாக்கப்பட்ட அறியாமைக்கு ஒரு மறைப்பாகும். மௌனம் என்பது அறியாமையின் அலங்காரம். குறிப்பாக கற்றறிந்த மக்கள் இருக்கும் சபையில், அறியாதவன் அமைதியாகவும், மௌனமாகவும் இருப்பதுவே, அவனுக்கு அலங்காரமாகும்.

பொதுவாக, நிறைகுடம் ததும்பாது, குறை குடம் கூத்தாடும் என்பார்கள்.

அதாவது, எல்லாம் அறிந்த அறிஞர் பெருமக்கள் எதையுமே தெரியாதவர்கள் போல இருப்பார்கள். ஆனால், எதுவுமே தெரியாத அரைகுறை அறிவு அதிக ஆர்ப்பாட்டம் செய்யும்.

பொதுவாக ஞானிகள் மௌனம் என்பது, ஒலியே வேண்டாம் என்று மறுப்பதல்ல. அல்லது மற்றவர்கள் பேச்சுக்கு கீழ் படிந்து போவதும் அல்ல. இவர்களது மௌனம் உடன்பாட்டுக் கோட்பாடு. அதாவது சுகத்திலிருந்து சௌக்கியம் வருவதுப் போல. இந்த மௌனம் என்ற வார்த்தை முனி என்ற வார்த்தையிலிருந்து வந்தது. இது உடலின் தூல மௌனம் அல்ல. மனதின் சூக்கும மௌனம். ஆத்மாவிடம் மனதை ஒப்படைத்தவனே முனி. அத்தகைய முனிவனின் பேச்சு, அவனது மௌனத்தின் சிதறல்கள் என்பதினால், அவன் அந்த ஆத்மாவிலிருந்து பேசுகின்றான். அவனது பேச்சு தனி மனித பேச்சு இல்லை. மேலும், ஞானியின் பேச்சுக்கு காரணமும் இல்லை, காரியமும் இல்லை.

यदा किञ्चिज्ज्ञोऽहं द्विप इव मदान्धः समभवं
तदा सर्वज्ञोऽस्मीत्यभवदवलिप्तं मम मनः ।
यदा किञ्चित्किञ्चिद्बुधजनसकाशादवगतं
तदा मूर्खोऽस्मीति ज्वर इव मदो मे व्यपगतः // 1.8 //

ய**தா** கிஞ்சிஜ் ஜ்ஞோஹம் **த்**விப இவ ம**தாந்த**: ஸம**ப**வம்
ததா ஸர்வஜ் ஞோஸ்மீத்ய **பவத** வலிப்தம் மம மன:
ய**தா** கிஞ்சித் கிஞ்சி**த் புத ஜ**ன ஸகாஸா**த**வ **க**தம்
ததா மூர்**கோ**ஸ் மீதி ஜ்வர இவ ம**தோ** மே வ்யப**க**த: // 1.8 //

தெளிவுரை:–

நான் கொஞ்சம் கற்றறிந்ததை வைத்துக் கொண்டு, எல்லாம் எனக்குத் தெரியும் என்ற அடிப்படையில், குருடர்கள் ஒரு யானை தடவிப் பார்த்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறியதுப் போல, நானும் எனக்குத் தெரிந்ததை பெருமையாக பிதற்றிக் கொண்டிருந்தேன். அதாவது, என் மனம் **"எனக்கு எல்லாம் தெரியும்"** என்று நினைத்து, ஆணவமாக இருந்தது. அதன்பிறகு, கற்றறிந்த ஞானிகளின் தொடர்பினால், எனக்கு எதுவுமே தெரியவில்லை என்பதை உணரும்போது, எனது ஆணவக் காய்ச்சல் தானாகவே தணிந்தது.

ஒரு ஊரில் ஒரு ஆணவக்காரன் ஒருவர் இருந்தான். அவன் தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற தலைக்கணம் கொண்டவனாக இருந்ததினால், அவன் யாரையும் மதிக்கமாட்டான்.

ஒரு நாள் அந்த ஆணவக்காரன் இரவு நேரம் வீதியில் நடந்து சென்றுக் கொண்டிருந்தான். அப்போது, அங்கே ஒரு கோவில் இருந்தது. அந்த கோவிலில் ஒரு குழந்தை ஒரு தீபத்தை ஏற்றி வழிபட்டது.

அந்த குழந்தையை பார்த்ததும், தனது திறமையை அந்த குழந்தையிடம் காட்டி திணறடிக்க விரும்பினான் இவன். அந்த குழந்தையிடம் சென்று வேடிக்கையாக கேட்டான். "ஏன் பாப்பா இந்த தீபத்தை நீயாகவே ஏற்றினாயா?"

"ஆமாம்" என்றது அந்த குழந்தை.

"சரி இந்த தீபம் இதற்கு முன்பு எரியாமல் தானே இருந்தது. ஆனால், இப்போது எரிகிறது."

"ஆமாம்..."

"இந்த தீபத்தின் வெளிச்சம் எங்கே இருந்து வந்தது என்று காட்ட முடியுமா?" என்று கேட்டான்.

அதற்கு அந்த குழந்தை சிரித்தது. இப்போது, அந்தக் குழந்தை அந்த தீபத்தை ஊதி அணைத்து விட்டது.

அதன் பிறகு அவனைப் பார்த்து **கேட்டது "இப்போ இந்த தீபத்தின் வெளிச்சம் எங்கே போனது என்று கூறமுடியுமா?** என்றது.

இந்த குழந்தை இப்படி கேட்டதும் அந்த ஆணவக்காரன் ஆடிப் போய்விட்டான். தான் படித்ததெல்லாம் அந்த வினாடியில் சுக்கு நூறாகிவிட்டதை உணர்ந்தான். தனது முட்டாள்தனத்தை தானே நொந்துக் கொண்டான்.

இதனால், நாம் இன்னாரிடமிருந்து இதைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை, யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம். ஆகவே, வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு என்பார்கள் நம் முன்னோர்கள்.

कृमिकुलचितं लालाक्लिन्नं विगन्धि जुगुप्सितं
निरुपमरसप्रीत्या खादन्नरास्थि निरामिषम् ।
सुरपतिमपि श्वा पार्श्वस्थं विलोक्य न शङ्कते
न हि गणयति क्षुद्रो जन्तुः परिग्रहफल्गुताम् ॥ 1.9 ॥

க்ருமிகுல சித்தம் லாலாக் லின்னம் வி**கந்த** ஜு**கு**ப்ஸிதம்
நிருப மரஸம் ப்ரீத்யா **காத**ன்ன ராஸ்**தி** நிராமிஷம் /
ஸுரபதிம் அபி ஸ்வா பார்ஸ் வஸ்**தம்** விலோக்ய ந ஸனகதே
ந ஹி **க**ணயதி க்ஷு**த்**ரோ ஜந்து: பரி**க்**ரஹ **ப**ல்**கு**தாம் // 1.9 //

தெளிவுரை:–

புழுக்கள் நிறைந்த, துர்நாற்றம் வீசுகின்ற, அருவருப்பான மாமிசத்தை, ஆசை ஆசையாக சுவைத்து மகிழ்கின்ற நாய் அதன் உமிழ்நீரில் நனைந்த எலும்பை மிகவும் மகிழ்ச்சியுடன் கடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த தேவர்களின் தலைவனான இந்திரனே அதன் அருகில் வந்தால்கூட அந்த நாய் அவரைக் கவனிக்காது. அதுப்போல, பேராசைக் கொண்ட ஒரு மனிதன் அற்ப விசய, சுகங்களில் ஆழமாக மூழ்கிக் கிடக்கும் நேரத்தில், மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டான்.

शिरः शार्वं स्वर्गात्पशुपतिशिरस्तः क्षितिधरं
महीध्रादुत्तुङ्गादवनिमवनेश्चापि जलधिम् /
अधोऽधो गङ्गेयं पदमुपगता स्तोकमथवा
विवेकभ्रष्टानां भवति विनिपातः शतमुखः // 1.10 //

சிர: ஸார்வம் ஸ்வர்**காத்** பசுபதி சிரஸ்த: க்ஷிதி **த**ரம்
ம்ஹீ**த்**ரா **து**த்துன **காத**வனிம் வனேஸ் சாபி ஜல**தி**ம் /
அதோதோ கனகேயம் **பதம்** உப **க**தா ஸ்தோகம்
அ**த**வா விவேக **ப்**ரஷ்டானாம் **ப**வதி வினிபாத: சதமு**க:** // 1.10 //

தெளிவுரை:–

கங்கை சொர்க்கத்திலிருந்து வெளிப்பட்டு, சிவனின் தலையில் விழுந்து, அதன் வேகம் கட்டுப்பட்டு, அதன்பிறகு அவரது தலையிலிருந்து மலைக்கும், பிறகு மிக உயர்ந்த மலையிலிருந்து சமவெளிக்கும், பிறகு சமவெளியின் வாழியாக பாய்ந்து, கடைசியாக கடலில் கலந்து ஒன்றுமில்லாமல் ஒடுங்கி விடுகின்றது.

அதுப்போல, அற்பமான முட்டாள்கள் அனேக வழிகளில் ஆதாயம் வருவதுப்போல, கருதிக் கொண்டு, ஆர்ப்பரித்து அடங்கிய பின் இவர்களும் ஒன்றுமில்லாமல் ஒடுங்கி விடுகின்றார்கள்.

शक्यो वारयितुं जलेन हुतभुक्छत्रेण सूर्यातपो
नागेन्द्रो निशिताङ्कुशेन समदो दण्डेन गोगर्दभौ ।
व्याधिर्भेषजसङ्ग्रहैश्च विविधैर्मन्त्रप्रयोगैर्विषं
सर्वस्यौषधमस्ति शास्त्रविहितं मूर्खस्य नास्त्यौषधम् // 1.11 //

ஸக்யோ வாரயிதும் ஜலேன ஹுதபுக்ச் **ச**த்ரேண ஸூர்யாதபோ
நா**கேந்த்**ரோ நிஸி தா**க்**குஸேன ஸம **தோத**ண்**டே**ன **கோகர் த**பௌ /
வ்யா**திர் பே**ஷ ஜஸன**க்**ரஹைஸ்ச விவி**தைர்** மந்த்ர ப்ரயோ**கைர்** விஷம்
ஸர்வஸ் ஔஷ**தம்** அஸ்தி சாஸ்த்ர விஹிதம் மூர்**க**ஸ்ய நஸ்த் ஔஷ**திம்** // 1.11 //

தெளிவுரை:–

தண்ணீரைக் கொண்டு நெருப்பை அணைக்கலாம். குடையைப் பயன்படுத்தி வெயிலிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம். காட்டு யானையைக்கூட அங்குசத்தின் உதவியினால் கட்டுப்படுத்தலாம். பசுக்கள் மற்றும் கழுதைகளின் கூட்டங்களையும் ஒரு குச்சியால் மேய்க்கலாம்.

அதுப்போலவே, குணப்படுத்த முடியாத நோய் ஏதேனும் இருந்தாலும்கூட, அதற்கான மருந்துகள் கொண்டு அவைகளை குணப்படுத்தலாம். மேலும், விஷம் குடித்த ஒருவரைக்கூட மந்திரங்கள் மற்றும் மருந்துகளின் உதவியுடன் குணப்படுத்தலாம். ஆனால், எந்த வேதத்திலோ அல்லது அறிவியலிலோ முட்டாள்தனத்திற்கு மட்டும் சிகிச்சையோ, தீர்வோ இல்லவே இல்லை.

साहित्यसङ्गीतकलाविहीनः साक्षात्पशुः पुच्छविषाणहीनः ।
तृणं न खादन्नपि जीवमानः तद्भागधेयं परमं पशूनाम् // 1.12 //

ஸாஹித்ய ஸன**கீ**த கலாவிஹீன: ஸாக்ஷாத்பஸு: புச்**ச**விஷாண ஹீன: /
த்ருணம் ந **காத**ன்னபி ஜீவ மானஸ் த**த் பாகதே**யம் பரமம் பஸூனாம் // 1.12 //

தெளிவுரை:–

இலக்கியம், இசை, கலை போன்ற கலைகளில் நாட்டமில்லாத மனிதன், கொம்பும், வாலும், நகங்களும் இல்லாத மிருகத்தைப் போன்றவன். அவன் மிருகங்களுக்கான புல்லை மேயாமல் இருந்தாலே போதும், அது மிருகங்கள் செய்த மிகப்பெரும் பாக்கியம்.

येषां न विद्या न तपो न दानं ज्ञानं न शीलं न गुणो न धर्मः ।
ते मर्त्यलोके भुवि भारभूताः मनुष्यरूपेण मृगाश्चरन्ति ॥ 1.13 ॥

யேஷாம் ந **வித்**யா ந தபோ ந **தா**னம் ஜ்ஞானம் ந சீலம் ந **கு**ணோ ந **த**ர்ம: /
தே மர்த்ய லோகே **பு**வி **பா**ர **பூ**தா மனுஷ்ய ரூபேண ம்ரு**கா**ஸ் சரந்தி // 1.13 //

தெளிவுரை:–

கல்வி, தவம், கொடை, ஞானம், நன்னடத்தை, நற்பண்பு, அறம் இவைகளை நடைமுறையில் மேற்கொள்ளாமல் வாழுகின்ற மனிதர்கள் எல்லாம், மனித உருவில் உள்ள மிருகங்கள் ஆவார்கள். இவர்களால் இந்த பூமிக்குத்தான் பாரம்.

वरं पर्वतदुर्गेषु भ्रान्तं वनचरैः सह ।
न मूर्खजन सम्पर्कः सुरेन्द्रभवनेष्वपि ॥ 1.14 ॥

வரம் பர்வத **துர்கே**ஷு **ப்**ராந்தம் வனசரை: ஸஹ
ந மூர்க **ஜ**ன ஸம்பர்க: ஸுரேந்**த்ர**ப**வனேஷ்வபி // 1.14 //

தெளிவுரை:–

முட்டாள்களுடன் சொர்க்கத்தில் வாழ்வதைவிட, காடுகளிலும், மக்கள் அணுக முடியாத மலைகளிலும், காட்டு விலங்குகளுடனும் சுற்றித் திரிவது மிகவும் நல்லது.

शास्त्रोपस्कृतशब्दसुन्दरगिरः शिष्यप्रदेयागमा
विख्याताः कवयो वसन्ति विषये यस्य प्रभोर्निर्धनाः ।
तज्जाड्यं वसुधाधिपस्य कवयो ह्यर्थं विनापीश्वराः
कुत्स्याः स्युः कुपरीक्षका न मणयो यैरर्घतः पातिताः ॥ 1.15 ॥

சாஸ்த்ரோப ஸ்க்ருத ஸ**ப்த** சுந்**த**ர**கி**ர: சிஷ்ய ப்ர**தே**யா**க**மா
வி**க்**யாதா: கவயோ வஸந்தி விஷயே யஸ்ய ப்ர**போ**ர்னிர் **த**னா: /
தஜ் ஜா**ட்**யம் வஸு**தாதி** பஸ்ய கவயஸ் த்வர்**த**ம் வினா பீஸ்வரா:
குத்ஸ்யா: ஸ்யு: குபரீக்ஷகா ஹி மணயோ யைரர் **க**த: பாதிதா: // 1.15 //

தெளிவுரை:–

தனது வார்த்தைகளை மிக அழகாகப் பயன்படுத்துவதில் திறமையானவராகவும், வேத அறிவில் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும், தனது சீடர்களையும் அத்தகைய கல்வியில் தேர்ச்சி பெறச் செய்யக் கூடியவராகவும் இருக்கும் ஒரு ஞானியைக் கண்டுகொள்ளாமல், யாருமில்லாத வறுமையில் அவர் வாழ நேரிட்டால், அது அந்த ஞானி வாழுகின்ற நாட்டையாளும் அரசனுக்கு இழுக்கு.

பொதுவாக, பணம், பதவி என எதுவும் இல்லாவிட்டாலும், ஞானிகள் அவர்களது அறிவு ஒளிப்பிரகாசத்தால் ஆனந்தமாகவே இருக்கின்றனர். எவ்வாறு, ஒரு நகைக் கடைக்காரரால், விலைமதிப்பற்ற இரத்தினங்களை முறையாக சோதிக்க முடியா விட்டால், அது இரத்தினக் கல்லின் தரமறியாத அந்த கடைக்காரரின் குற்றம்தானே தவிர, அதனால், அந்த ரத்தினக் கல்லின் மதிப்பு ஒருபோதும் குறையாது.

அதுப்போல, ஞானிகளை மதிக்கத் தெரியாதது, அந்த அரசனின் குற்றம்தானே தவிர, அது அந்த ஞானிகளின் குற்றம் இல்லை.

हर्तुर्याति न गोचरं किमपि शं पुष्णाति यत्सर्वदा–
ह्यर्थिभ्यः प्रतिपाद्यमानमनिशं प्राप्नोति वृद्धिं परां ।
कल्पान्तेष्वपि न प्रयाति निधनं विद्याख्यमन्तर्धनं
येषां तान्प्रति मानमुज्झत नृपाः कस्तैः सह स्पर्धते // 1.16 //

ஹர்துர்யாதி ந **கோ**சரம் கிம் அபி ஸம் புஷ்ணாதி யத் ஸர்வ**தாப்**
அர்திப்ய: ப்ரதிபா**த்**ய மானம் அனிஸம் ப்ராப்னோதி வ்ரு**த்தி**ம் பராம் /
கல்பாந் தேஷ்வபி ந ப்ரயாதி நி**த**னம் வி**த்**யா**க்**யம் அந்தர் **த**னம்
யேஷாம் தான்ப்ரதி மானமுஜ்**ஜ**த ந்ருபா: கஸ்தை: ஸஹ ஸ்பர்**த**தே // 1.16 //

தெளிவுரை:–

அறிவு ஒரு அற்புதமான செல்வம். அது எந்த கள்வர்களாலும் களவாட முடியாதது. அவர்களது அறிவு ஒருபோதும் குறையாத செல்வம் போன்றது. அது அவர்களை எப்போதும் நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கின்றது. அத்தகைய அத்யாத்ம கல்வி அறிவை ஒருவர் உங்களிடம் பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் வரும்போது, நீங்கள் அவருக்கு கற்றுக் கொடுக்கும்போது, உங்கள் அறிவுச் செல்வம் இன்னும் பன்மடங்கு உயருகின்றது.

அத்தகைய அத்யாத்மக் கல்வியைக் கற்றவர்களின் ஞானம் என்பது, இந்த உலகத்தின் முடிவோடு முடிவடைவதும் கிடையாது. அது என்றென்றும் அவர்களிடமுள்ள சுய அறிவு ஒளி.

ஆகையால், அரசனே! அத்தகைய உயரிய அத்யாத்ம ஞானத்தில் திளைக்கின்ற உத்தம ஞானிகளைக் கண்டால், அவர்களிடம் உன் ஆணவத்தை விட்டு, விட்டு, புற அறிவால் அவர்களோடு போட்டி போடுவதை தவிர்த்து விட்டு, உன் அக அறிவால் அவர்களை அணுகுவாயாக.

ஏனெனில், அத்தகைய தூய அறிஞர்களுக்கு ஈடாக இன்னொரு தூய அறிஞன் மட்டுமே இருக்க முடியும். ஆகவே, நீ அவர்களுக்குச் சமமாகப் போட்டியிடுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

अधिगतपरमार्थान् पण्डितान् मावमंस्था–
स्तृणमिव लघु लक्ष्मीर्नैव तान् संरुणद्धि ।
अभिनवमदलेखाश्यामगण्डस्थलानां
न भवति बिसतन्तुर्वारणं वारणानाम् ॥ 1.17 ॥

அ**தி**க**த** பரமார்**தா**ன் பண்**டி**தான் மாவ மம்ஸ்**தா**ஸ்
த்ருணமிவ ல**கு** லக்ஷ்மீர்னைவ தான் ஸம்ருண**த்தி** ।
அ**பி**னவம**த**லே **கா**ஸ்யாம **கண்ட**ஸ் **த**லானாம்
ந **ப**வதி **பி**ஸதந்துர் வாரணம் வாரணானாம் ॥ 1.17 ॥

தெளிவுரை:–

ஒரு ஞானியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடவோ அல்லது அவமதிக்கவோ கூடாது. ஏனென்றால், ஞானியைப் பொருத்தவரை, அழியக்கூடிய அற்ப செல்வங்களான இந்த உலகப் பொருட்களை ஒரு பொருட்டாக அவர் கருதுவது இல்லை. அவரது அடைந்த ஆத்ம ஞானத்தை விட மிக உயர்ந்த செல்வம் இந்த உலகத்தில் எங்குமே இருக்க முடியாது.

ஆகவே, அழியக்கூடிய அற்ப செல்வங்கள் எல்லாம் ஞானிகளைப் பொருத்தவரை ஒரு பொருட்டே அல்ல.

எவ்வாறு மதம் பிடித்த யானையை தாமரை தண்டைக் கொண்டு, கட்டிவிட முடியாதோ? அதுப்போல, அழியக்கூடிய அற்ப செல்வங்களைக் காட்டி ஞானிகளின் சுதந்திரத்தைக் கட்டிவிட முடியாது.

अम्भोजिनीवननिवासविलासमेव
हंसस्य हन्ति नितरां कुपितो विधाता ।
न त्वस्य दुग्धजलभेदविधौ प्रसिद्धां
वैदग्ध्यकीर्तिमपहर्तुमसौ समर्थः ॥ 1.18 ॥

அம்போஜினீ வனவிஹார விலாஸம் ஏவ
ஹம்ஸஸ்ய ஹந்தி நிதராம் குபிதோ வி**தா**தா /
ந த்வஸ்ய **துக்த ஜலபேத** வி**தௌ** ப்ரஸி**த்தாம்**
வை**தக்தீ** கீர்திம் அபஹர்தும் அஸௌ ஸமர்**த**: // 1.18 //

தெளிவுரை:–

அன்னப்பறவையின் மீது, அளவுகடந்த கோபம் கொண்ட பிரம்ம தேவரால், அந்த அன்னப்பறவையின் வாழ்விடமான குளத்து நீரை வற்றச் செய்து, அதன் வாழ்விடமான தாமரை இலையை வாடச் செய்து, அதன் வசிப்பிடத்தை மட்டுமே அவரால் பறிக்க இயலும்.

ஆனால், அவரே நினைத்தால்கூட அன்னப்பறவையின் அற்புதத் திறனான பாலையும், நீரையும் பிரிக்கும் கலையைப் பறிக்க முடியாது.

அதுப்போல, அறியாமைக் கொண்ட அரசன் ஞானிகளைக் கண்டு, பொறாமைக் கொண்டு, அவர்கள் வாழும் வசதிகளை வேண்டுமானால் பறித்து விடலாம். ஆனால், அவர்களுடைய அத்யாத்ம கல்வியில் வெளிப்படுகின்ற ஆத்ம ஞானத்தை அரசனால் கூட ஒன்றும் செய்ய இயலாது. ஏனெனில், ஞானிகளிடம் வெளிப்படுகின்ற அவர்களது அத்தனை திறமைகளும், அந்த தூய அறிவாகிய ஆத்மாவின் திறமைகள் என்பதினால், அதை யாராலும் பறித்துக் கொள்ள முடியாது.

केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्ज्वला
न स्नानं न विलेपनं न कुसुमं नालङ्कृता मूर्धजाः ।
वाण्येका समलङ्करोति पुरुषं या संस्कृता धार्यते
क्षीयन्ते खलु भूषणानि सततं वाग्भूषणं भूषणम् ॥ 1.19 ॥

கேயூராணி ந **பூ**ஷயந்தி புருஷம் ஹாரா ந சந்**த்**ரோஜ்ஜ்வலா
ந ஸ்னானம் ந விலேபனம் ந குஸுமம் நாலனக்ருதா மூர்**தஜா**: /
வாண்யேகா ஸமலனகரோதி புருஷம் யா ஸம்ஸ்க்ருதா **தா**ர்யதே
க்ஷீயந்தே **க**லு **பூ**ஷணானி ஸததம் வா**க்பூ**ஷணம் **பூ**ஷணம் // 1.19 //

தெளிவுரை:–

ஒருவர் அழகிய கை வளையல்கள், சந்திரனைப் போன்ற பிரகாசமான கழுத்தணிகலன்கள் என எத்தனை விதமான நகைகளை அணிவதினாலும், அவரது உடலில் வாசனை திரவியங்களை பூசிக் கொள்வதினாலும், தலையில் பூக்களை சூடிக் கொள்வதினாலும், உண்மை அழகை ஒருபோதும் அவைகள் வெளிப்படுத்தாது.

ஒருவரது உண்மையான அழகு என்பது, அவர்களது மேம்பட்ட வார்த்தைகளினாலேயே வெளிப்படுகின்றது.

ஆகவே, அற்ப அணிகலன்கள் நாள்பட, நாள்பட அதன் பிரகாச ஒளிக்குன்றி, பார்ப்பதற்கு பழையது ஆகி, நிறம் மங்கி காணப்படுகின்றது. அதுவே, ஞானிகளிடமிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் நாள்பட, நாள்பட இன்னும் பிரகாசமாக மெருகேரி, அனைவராலும், பேசப்படுகின்ற உன்னத நிலைக்கு உயர்ந்துவாறு, அந்த வார்த்தைகள் பண்பட்டு காணப்படுகின்றது.

विद्या नाम नरस्य रूपमधिकं प्रच्छन्नगुप्तं धनं
विद्या भोगकरी यशस्सुखकरी विद्या गुरूणां गुरुः ।
विद्या बन्धुजनो विदेशगमने विद्या परा देवता
विद्या राजसु पूजिता न तु धनं विद्याविहीनः पशुः // 1.20 //

வித்யா நாம நரஸ்ய ரூபம் **அதி**கம் ப்ரச்**ச**ன்ன **கு**ப்தம் **த**னம்
வித்யா **போக**கரீ யஸ: ஸுககரீ **வித்**யா **கு**ரூணாம் **கு**ரு: /
வித்யா **பந்து** ஜனோ **விதே**ஸ**க** மனே **வித்**யா பரா **தே**வதா
வித்யா ராஜஸு பூஜ்யதே ந து **த**னம் **வித்**யா விஹீன: பஸு: // 1.20 //

தெளிவுரை:–

கற்ற அத்யாத்ம கல்வியின் சிறப்பே, அந்த மனிதனை மகத்தாகவனாக மாற்றுகின்றது. அது அவனிடம் பாதுகாப்பாகவும், மறைப்பாகவும் இருகின்ற இன்றியமையாத செல்வம். இது மற்றவர்களால் களவாட முடியாத மறைத்து வைக்கப்பட்ட மகத்தான செல்வம். இத்தகைய கல்வியின் வாயிலாக, கற்றவர்களுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு. இத்தகைய அறிவுக் கல்வி ஒன்று மட்டுமே, ஒருவனது அறியாமைக் கண்களை திறக்கின்ற அற்புதமான திறவுகோல்.

உயரிய மன்னர்களால், கற்றறிந்த சான்றோர்களாலும் கட்டாயம் தொழப்படுவது கல்வியே ஆகும். கல்வி மட்டுமே இவர்களைக் காக்கின்ற மிக உயரிய அரணாக இருக்கின்ற அரிதான செல்வம். மற்ற செல்வங்கள் எல்லாம் இவர்களை அழிக்கின்ற அற்பமான செல்வம். ஆகவே, கல்வி அறிவு இல்லாத மனிதன் மிருகத்தைப் போன்றவன்.

क्षान्तिश्चेत् कवचेन किं किमरिभिः क्रोधोऽस्ति चेद्देहिनां
ज्ञातिश्चेदनलेन किं यदि सुहृद् दिव्यौषधैः किं फलम् ।
किं सर्पैर्यदि दुर्जनाः किमु धनैर्विद्यानवद्या यदि
व्रीडा चेत्किमु भूषणैः सुकविता यद्यस्ति राज्येन किम् ॥ 1.21 ॥

க்ஷாந்திஸ்சேத் கவசேன கிம் கிம் அரி**பி**: க்ரோ**தோ**ஸ்தி சே**த்தே**ஹினாம்
ஜ்ஞாதிஸ்சே**த**னலேன கிம் ய**தி** ஸுஹ்ரு**த்தி**வ்யௌஷ**த**ம் கிம் **ப**லம் ।
கிம் ஸர்பைர்ய**தி** **து**ர்ஜனா: கிம் உ **த**னைர்வி**த்**யானவ**த்**யா ய**தி**
வ்ரீடா சேத்கிமு **பூ**ஷணை: ஸுகவிதா ய**த்**யஸ்தி ராஜ்யேன கிம் ॥ 1.21 ॥

தெளிவுரை:–

எதிகளால் தாக்கப்படுகின்ற ஆயுதங்களை ஒருவன் அணிந்துக் கொண்டுள்ள கவசம் அந்த ஆயுதங்களால் அவனைத் தாக்காமல் காப்பதுப் போல, ஒருவனுக்கு பொறுமை எனும் கவசம் இருப்பின், மற்றவர்களால் தாக்கப்படுகின்ற வார்த்தை ஆயுதங்கள் அவனை காப்பாற்றும். ஒருவனிடமுள்ள கோபம் என்ற கொடிய குணமே, பெருந்துன்பங்களை விளைவிக்கும் பகைவர்கள் போல, அவனது மனதிற்கு அதிக துயரத்தைக் கொடுக்கும்.

நெருப்பு எப்படி எல்லாப் பொருட்களையும் எரித்து விடுகின்றதோ? அதுப்போல, நமது உறவுகள் நம்முடைய எல்லாப் பொருட்களையும் அழித்து விடுவார்கள். தீயவர்களிடம் நட்பு கொண்டவர்கள் கொடிய விஷம் கொண்ட பாம்பைப் போல, அந்த தீயவர்களால் அழிவுக்கு உட்படுவார்கள். அதுவே, நல்லவர்களை நட்பு கொண்டவர்கள் அந்த நல்ல நண்பர்களால் எப்போதும் காக்கப்படுவார்கள். அத்தகைய உண்மையான நண்பர்கள் தன் நண்பனின் ஆரோக்கியத்திலும் அதிக கவனம் செலுத்துவார்கள். அவனது செல்வத்தை சேமிக்க வைப்பார்கள்.

அதாவது, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதுப் போல, நண்பனின் செல்வத்தையும் சேர்த்துக் காப்பார்கள். அதுப்போல, அடக்கம் உள்ளவர்களுக்கு அணிகலன்கள் அவசியம் இல்லை. அவ்வாறே ஆத்ம ஞானம் அடைந்த ஞானிகளுக்கு அரசியல் என்றுமே அவசியம் இல்லை.

दाक्षिण्यं स्वजने दया परजने शाठ्यं दुर्जने
प्रीतिः साधुजने नयो नृपजने विद्वज्जनेष्यार्जवम् ।
शौर्यं शत्रुजने क्षमा गुरुजने नारीजने धूर्तता
ये चैवं पुरुषाः कलासु कुशलास्तेष्वेव लोकस्थितिः ॥ 1.22 ॥

தாக்ஷிண்யம் ஸ்வஜனே **த**யா பரிஜனே ஸாட்யம் ஸ**தா து**ர்ஜனே
ப்ரீதி: ஸா**து** ஜனே நயோ ந்ருபஜனே வி**த்**வஜ்ஜனே சார்ஜவம் ।
ஸௌர்யம் ஸத்ரு ஜனே க்ஷமா **கு**ரு ஜனே நாரி ஜனே **த்**ருஷ்டதா
யே சைவம் புருஷா: கலாஸு குஸலாஸ் தேஷ்வேவ லோகஸ்**தி**தி: ॥ 1.22 ॥

தெளிவுரை:–

சுற்றத்தாரோடு அன்பு, மற்றவர்களோடு கருணை, தீயவரோடு தந்திரம், நல்லவரோடு நட்பு, அரசினரோடு நயம், கற்றவரோடு நாணயம், பகைவரோடு வீரம், மூத்தவரோடு பொறுமை, பெண்களோடு சாமர்த்தியம் – இத்தகைய பண்புகளில் நன்றாகத் தேர்ந்த நன் மக்களால்தான் இந்த உலகம் இன்று வரை நிலைக்கின்றது.

தன்னுடைய உற்றார், உறவுகளுடன் கடமையுணர்வுடன் நடந்து கொள்வது, அந்நியர்களிடம் கருணையுடன் இருப்பது, தீயவர்களிடம் எப்போதும் எச்சரிக்கையாக இருப்பது, நல்லவர்களிடம் நல்ல முறையில் நட்பு பாராட்டுவது. மன்னர்களிடம் சாதுர்யமாக நடந்து கொள்வது, கற்றவர்களிடம் உண்மையாக நடந்து கொள்வது, எதிரிகளிடம் துணிச்சலாக நடந்து கொள்வது, ஆசிரியர்களிடம் பணிவாக நடந்து கொள்வது, பெண்களிடம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது போன்ற இத்தகைய நற்குணங்களைக் கொண்ட நல்ல மனிதர்களினால்தான் இன்று வரை இந்த உலகம் சுபிக்ஷமாக இருக்கின்றது.

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं
मानोन्नतिं दिशति पापमपाकरोति ।
चेतः प्रसादयति दिक्षु तनोति कीर्तिं
सत्सङ्गतिः कथय किं न करोति पुंसाम् ॥ 1.23 ॥

ஜாட்யம் **தி**யோ ஹரதி ஸிஞ்சதி வாசி ஸத்யம்
மானோன்னதிம் **தி**ஸதி பாபம் அபாகரோதி ।
சேத: ப்ரஸா**த**யதி **தி**க்ஷு தனோதி கீர்திம்
ஸத்ஸங்**க**தி: க**த**ய கிம் ந கரோதி பும்ஸாம் ॥ 1.23 ॥

தெளிவுரை:–

கற்றறிந்த ஞானிகளின் நட்பு ஒருவனுடைய அறியாமையைப் போக்கி, அவனது வாய்மையினை வளர்க்கின்றது. அதனால், அவனது சுய மரியாதை அதிகரித்து, அவனுக்கு மேன்மையினைக் கொடுக்கின்றது. மேலும், அவனது பாவத்தினைக் களைந்து, அவனுக்கு நல்ல உள்ளத்தினை உண்டாக்குகின்றது. அத்தகைய நல்ல மனிதனின் புகழ் எல்லா திசைகளிலும் பரவி, இத்தகைய நல்லோரிணக்கத்தை இன்னும் நிலை நிறுத்துகின்றது.

जयन्ति ते सुकृतिनो रससिद्धाः कवीश्वराः
नास्ति येषां यशः काये जरामरणजं भयम् // 1.24 //

ஜயந்தி தே ஸுக்ருதினோ ரஸஸி**த்தா**: கவீஸ்வரா: /
நாஸ்தி யேஷாம் யஸ: காயே ஜரா மரணஜம் **ப**யம் // 1.24 //

தெளிவுரை:–

ஞானிகள் தங்கள் படைப்புகளை இன்னும் மெருகூட்டி, மற்றவர்களை இரசிக்க வைப்பதில், மிகவும் திறமையான சிறந்த கவிஞர்கள் என்பதினால், உண்மையான கௌரவத்திற்கும், புகழுக்கும் அவர்கள் மட்டுமே தகுதியானவர்கள். அவர்கள் அடைந்த சிறப்புமிக்க ஆத்ம ஞான அனுபவமும், அதனால் உண்டான விவேகமும், அவர்களை முற்றிலுமாக முதுமை மற்றும் மரண பயத்திலிருந்து விடுவித்து விடுகின்றது.

सूनुः सच्चरितः सती प्रियतमा स्वामी प्रसादोन्मुखः
स्निग्धं मित्रमवञ्चकः परिजनो निष्क्लेशलेशं मनः /
आकारो रुचिरः स्थिरश्च विभवो विद्यावदातं मुखं
तुष्टे विष्टपकष्टहारिणि हरौ संप्राप्यते देहिना // 1.25 //

சுனு: ஸச்சரித: சதீ ப்ரியதமா ஸ்வாமீ ப்ரஸா**தோ**ன் மு**க**:
ஸ்னி**க்த**ம் மித்ரம் அவஞ்சக: பரிஜனோ நிஷ்க்லேஸ லேஸம் மன: /
ஆகாரோ ருசிர: ஸ்**தி**ரஸ்ச வி**ப**வோ வி**த்**யாவ**தா**தம் மு**க**ம்
துஷ்டே விஷ்ட பகஷ்டஹாரிணி ஹரௌ ஸம் ப்ராப்யதே **தே**ஹினா // 1.25 //

தெளிவுரை:–

ஒருவன் நல்லொழுக்கமுள்ள மகன், அர்ப்பணிப்புள்ள மனைவி, மகிழ்ச்சியான மற்றும் கருணையுள்ள எஜமானன், அன்பான மற்றும் உதவிகரமான நண்பன், நேர்மையான வேலைக்காரன், சிறிதும் கவலையற்ற இலேசான மனம், அழகான உடல், நிலையான செல்வம், ஞானத்தினால் பிரகாசிக்கின்ற முகம் ஆகிய இவைகள் யாவற்றையும் அடைய வேண்டுமானால், அதற்கான அத்தனை அம்சங்களையும் பொருந்திய ஒன்று அவனுக்குள்ளேயே தூய அறிவாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பதை அவன் அறிய வேண்டும்.

அத்தகைய தூய அறிவாகிய பரமன் தன்னுடைய அறிவானால்தான் எல்லாவற்றையும் அறிய வைக்கின்றான் என்ற அறிவு இவனுக்கு வந்துவிட்டால், அவன் அருள் இல்லாமல், எதையுமே அடைய முடியாது என்பதை இவன் நன்கு உணர்வான்.

प्राणाघातान्निवृत्तिः परधनहरणे संयमः सत्यवाक्यं
काले शक्त्या प्रदानं युवतिजनकथा मूकभावः परेषाम् ।
तृष्णास्रोतोविभङ्गो गुरुषु च विनयः सर्वभूतानुकम्पा
सामान्यः सर्वशास्त्रेष्वनुपहतविधिः श्रेयसामेष पन्थाः ॥ 1.26 ॥

ப்ராணா **கா**தான்னி வ்ருத்தி: பர**த**ன ஹரணே ஸம்யம: ஸத்ய வாக்யம்
காலே ஸக்த்யா **ப்ரதா**னம் யுவதி ஜன க**தா** மூக**பா**வ: பரேஷாம் /
த்ருஷ்ணா ஸ்ரோதோ வி**ப**ன**கோ கு**ருஷு ச வினய: ஸர்வ **பூ**தானு கம்பா
ஸாமான்ய: ஸர்வ சாஸ்த்ரேஷ் வனுபஹ தவி**தி**: ஸ்ரேயஸாம் ஏஷ பந்**தா**: // 1.26 //

தெளிவுரை:–

எந்த ஒரு உயிரினத்திற்கும் தீங்கு விளைவிக்காமல் இருப்பது, பிறரின் செல்வத்தைக் கள்வாட நினைக்காமல் இருப்பது, எப்போதும் உண்மையை மட்டுமே பேசுவது, சரியான நேரத்தில் சங்கடத்தில் உள்ளவர்களுக்கு உதவுவது, மாற்றான் மனைவியைப் பற்றிப் பிறரிடம் பேசாமல் இருப்பது, பேராசைக் கொள்ளாமல் இருப்பது, பெரியவர்களை மதிப்பது, மற்றும் அனைத்து உயிரினங்களிடமும் கருணை காட்டுவது – இதுவே அனைத்து சாஸ்திரங்களின்படி, நம் அனைவருக்குமான நல்வாழ்வு மற்றும் மகிழ்ச்சிக்கான பாதை.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். – திருக்குறள்.

प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः
प्रारभ्य विघ्नविहता विरमन्ति मध्याः ।
विघ्नैः पुनः पुनरपि प्रतिहन्यमानाः
प्रारब्धमुत्तमजना न परित्यजन्ति ॥ 1.27 ॥

**ப்ராரப்யதே ந கலு விக்ன பயேன நீசை:
ப்ராரப்ய விக்ன விஹதா விரமந்தி மத்யா: ।
விக்னை: புன: புனரபி ப்ரதி ஹன்யமானா:
ப்ராரப்தம் உத்தம ஜனா ந பரித்யஜந்தி ॥ 1.27 ॥**

தெளிவுரை:–

பொதுவாக, இந்த உலகத்தில் மூன்று வகையான மனிதர்கள் உள்ளனர். இவர்களைப் பொருத்தவரை எல்லோருமே மனதளவில் மகிழ்ச்சியாக வாழ நினைத்தாலும், அதே மனதினால், கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்டவர்களாக சிலரும், நல்ல எண்ணங்களைக் கொண்டவர்களாக சிலரும், மிக உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவர்களாக சிலரும் என மூன்று விதமான பிரிவினர்கள் இருக்கின்றார்கள்.

இவர்களில் கீழ்த்தரமான எண்ணங்கள் கொண்ட மனிதர்கள் எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டு, செய்யும் செயல்களில் மற்றவர்களுக்கு இடைஞ்சல்கள் செய்துக் கொண்டு, மற்றவர்களையும் நன்றாக வாழ வைக்க மாட்டார்கள், இவர்களும் நன்றாக வாழ மாட்டார்கள். அடுத்த வகை மனிதர்கள் நல்லவர்களாக இருப்பதினால், எல்லோரையும் நன்றாக நடத்துவார்கள், நல்ல செயல்களைச் செய்வார்கள். அதேசமயம் மற்றவர்களால் தனக்கு துன்பம் நேரிட்டால், தனது நல்ல செயல்களையும் கூட பயத்தினால் நிறுத்திக் கொள்வார்கள். மூன்றாவதாக ஒரு வகை மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரையும் நேசிப்பார்கள். மற்றவர்களால் வருகின்ற இடைஞ்சல்களைக் கூட பொருத்துக் கொள்வார்கள்.

இவர்கள் செய்கின்ற நற்காரியங்களில் எத்தகைய சிரமங்களை எதிர் கொள்ள நேரிட்டாலும், அவைகளை விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்கொண்டு, எடுத்த வேலையை முடிக்காமல் விட மாட்டார்கள். இவர்களே மிகவும் மேலானவர்கள்.

प्रिया न्याय्या वृत्तिर्मलिनमसुभङ्गेऽप्यसुकरं
त्वसन्तो नाभ्यर्थ्याः सुहृदपि न याच्यः कृशधनः ।
विपद्युच्चैः स्थेयं पदमनुविधेयं च महतां
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम् ॥ 1.28 ॥

பிரியா நியாயயா விருத்தி ம்ருலின அசுபங்கே அப்யாசுகரம்
த்வசந்தோ நாப்யர்த்யா: சுஹ்ருதபி ந யாச்ய: கஸதன: |
விபத்யுச்சை: ஸதேயம் பத்மனுவிதேயம் ச மஹதான்
சதாம் கேனோதிஷ்ட விஷமம சிதாரா வ்ரதமிதம் // 1.28 //

தெளிவுரை:–

இனியதும், நேர்மையுமான நடத்தை உள்ளவர்கள் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் வந்தாலும், அதற்கு பயந்துக் கொண்டு, பாவச் செயல்களை ஒருபோதும் செய்யக் கூடாது. நீதியான வாழ்க்கையை நடத்துவதில் ஆர்வம் காட்ட வேண்டும். நமக்கு கேடுகளைச் செய்கின்ற தீயவர்களிடம் எந்த சூழ்நிலைகளிலும் பணிந்து போகக் கூடாது. ஏழைகளிடமோ அல்லது வறுமையிலுள்ள நண்பர்களிடமோ பொருளாதார உதவியைப் பெறக்கூடாது. கடினமான காலங்கள் அல்லது பாதகமான சூழ்நிலைகளில் கூட பொறுமையாக இருக்கப் பழக வேண்டும்.

சிறந்த மனிதர்கள் காட்டிய இத்தகைய சிறப்பான பாதையைப் பின்பற்ற வேண்டும் என்றும், கூர்மையான வாளின் முனையில் நடக்கும் இந்தப் பாதையை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும் என்றும், மிக உயரிய உள்ளம் கொண்ட உத்தம மனிதர்களுக்கு யாரும் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. அவைகள் தானாகவே அவர்கள் சுபாவமாக இருக்கும்.

क्षुत्क्षामोऽपि जराकृशोऽपि शिथिलप्रायोऽपि कष्टां दशाम्–
आपन्नोऽपि विपन्नदीधितिरपि प्राणेषु नश्यत्स्वपि /
मत्तेभेन्द्रविभिन्नकुम्भकवलग्रासैकबद्धस्पृहः
किं जीर्णं तृणमत्ति मानमहतामग्रेसरः केसरिः // 1.29 //

க்ஷுத்க்ஷாமோபி ஜராக்ருஸோபி சிதிலப்ராயோபி கஷ்டாம் **த**ஸாம்
ஆபன்னோபி விபன்ன**தீதி** திரதி ப்ராணேஷு நஸ்யத் ஸ்வபி /
மத்தே **பேந்த்**ரவி**பி**ன்ன கும்பக வல்க்ரா சைக**பத்த** ஸ்ப்ருஹ:
கிம் ஜீர்ணம் த்ருணமத்தி மான மஹதாம் **அக்**ரேஸர: கேஸரி: // 1.29 //

தெளிவுரை:–

காட்டின் ராஜாவான சிங்கம், ஒரு மதம்பிடித்த யானையின் கடினமான மண்டையின் மீது மோதி, அதன் ஆணவத்தை அடக்கி, அதனையே தனக்கு உணவாக மாற்றிக் கொள்ளுமே தவிர, ஒருபோதும் காய்ந்த புல்லை உணவாக உட்கொள்ளாது.

அதுப்போல, வயதான காலத்தில், வறுமையின் வாழ்ந்தாலும், பசியின் காரணமாக மிகவும் பலவீனமாகவும், சக்தியற்றவராகவும் இருந்தாலும், தன்னுடைய உயிரே போவதாக இருந்தாலும், உத்தமர்கள் தாங்களாகவே வலிய சென்று, மற்றவர்களின் உதவியை நாட மாட்டார்கள். முடிந்தவரை சுயமாக வாழ்க்கையில் போராடிப் பார்ப்பார்கள்.

स्वल्पस्नायुवसावशेषमलिनं निर्मांसमप्यस्थिकं
श्वा लब्ध्वा परितोषमेति न तु तत्तस्य क्षुधाशान्तये ।
सिंहो जम्बुकमङ्कमागतमपि त्यक्त्वा निहन्ति द्विपं
सर्वः कृच्छ्रगतोऽपि वाञ्छति जनः सत्त्वानुरूपं फलं // 1.30 //

ஸ்வல்பஸ்னாயு வஸாவ ஶேஷமலினம் நிர்மாம்ஸம் அப்யஸ்**தி** கம்
ஸ்வா ல**ப்த்**வா பரிதோஷமிதி ந து தத்தஸ்ய க்ஷு**தா** ஸாந்தயே /
ஸிம்ஹோ ஜம்**பு**க அங்கமாகத மபி த்யக்த்வா நிஹந்தி **த்**விபம்
ஸர்வ: க்ருச்**ச்**ர **க**தோபி வாஞ்**ச**ந்தி ஜன: ஸத் த்வானுரூபம் பலம் // 1.30 //

தெளிவுரை:–

தசையும், மஜ்ஜையும் சற்று ஒட்டிக் கொண்டுள்ள, இறைச்சியற்ற எலும்புத்துண்டை எடுத்துக் கொண்டு வந்த ஒரு நாய் அந்த எலும்பைக் கொண்டு பசியாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும், அந்த அற்பமான எலும்புத் துண்டைக் கொண்டு மகிழ்ச்சியடைகின்றது.

இதுப்போலவே, ஒரு சிங்கம் தன் பசிக்கான உணவை வேட்டையாடிப் பெற விரும்பும்போது, தன் பிடியில் அகப்பட்ட ஓநாயை விட்டு, விட்டு அங்கு வந்த பெரிய யானைக் கொல்ல ஆசைப்படும். அதுப்போல, அற்ப மனிதர்கள் அளவுகடந்த துன்பங்களில் இருந்தாலும், இன்னும் அற்பமான விசய, சுகங்களிலேயே அதிக ஆர்வம் காட்டுவார்கள். அதிலேயே மகிழ்ச்சி இருப்பதாக நினைத்துக் கொண்டு, அதன் பின்னாலேயே ஓடுவார்கள்.

लाङ्गूलचालनमधश्चरणावपातं
भूमौ निपत्य वदनोदरदर्शनं च ।
श्वा पिण्डदस्य कुरुते गजपुङ्गवस्तु
धीरं विलोकयति चाटुशतैश्च भुङ्क्ते // 1.31 //

லாங்**கூ**லசாலனம் அ**தஸ்** சரணாவபாதம்
பூமௌ நிபத்ய வதனோ **தரத**ர்ஸனம் ச /
ஸ்வா பிண்**டத**ஸ்ய குருதே க**ஜ**புங்**க**வஸ்து
தீரம் விலோகயதி சாடுஸ தைஸ்ச **பு**ங்கதே // 1.31 //

தெளிவுரை:–

ஒரு நாய் தன் எசமானன் உணவளிக்க வரும்போது, அது தன் வாலை ஆட்டிக்கொண்டு, அங்குமிங்கும் உருண்டு, பிரண்டு, அவனது காலை நக்கி, தனது காலினால் அவனை சுரண்டி, அந்த உணவை ஏற்றுக் கொள்ளும். ஆனால், ஒரு யானையோ உணவு கொடுக்கும் பாகனைப் பார்த்து, மிகவும் அமைதியாக நின்று கொண்டிருக்கும், அந்த உணவு கொடுக்கும் பாகன் அந்த யானையைப் பார்த்து பலமுறை உணவை எடுத்துக் கொள் என்று கூறிய பின்னரே, அந்த உணவை யானை உட்கொள்ளத் தொடங்கும்.

அதுப்போல, மிக உயரிய சான்றோர்கள் எவ்வளவுதான் வறுமை வந்தாலும், யாரிடமும், எதற்காகவும் தன்மானத்தை இழந்து வாழ மாட்டார்கள்.

परिवर्तिनि संसारे मृतः को वा न जायते ।
स जातो येन जातेन याति वंशः समुन्नतिम् ॥ 1.32 ॥

பரிவர்தினி ஸம்ஸாரே ம்ருத: கோ வா ந ஜாயதே /
ஸ ஜாதோ யேன ஜாதேன யாதி வம்ஸ: ஸமுன்னதிம் // 1.32 //

தெளிவுரை:–

சுற்றுகின்ற பூமியில், பொருளாதாரத்திற்காக இந்த உலகை சுற்றும் மனிதர்களில், பிறந்த பின்பு, இறக்காமல் இருக்க முடியுமா? என்றால், பிறந்தவர்களெல்லாம் இறக்கத்தான் வேண்டும் என்றாலும், எவன் ஒருவன் தனது வம்சாவளியின் மகிமையை உணர்ந்து, தன் உயரிய பாரம்பரியத்தை, தனக்கு பின்னால் வருகின்ற மனித சமுதாயத்திற்கு மிகச் சரியாகக் காட்டிக் கொடுத்து விட்டு, அவனது உடலை விடுகின்றானோ? அவனே இறந்த பின்னும், எப்போதும் வாழ்கின்றான்.

कुसुमस्तबकस्येव द्वयी वृत्तिर्मनस्विनः ।
मूर्ध्नि वा सर्वलोकस्य विशीर्येत वनेऽथवा ॥ 1.33 ॥

குஸுமஸ்தவ கஸ்யேவ **த்**வயீ வ்ருத்திர் மனஸ்வின: /
மூர்**த்**னி வா ஸர்வ லோகஸ்ய விஸீர்யேத வனே (அ)**த**வா // 1.33 //

தெளிவுரை:–

தோட்டத்திலே பூத்து குலுங்குகின்ற மலர்கள் பறிக்கப்பட்டால், மற்றவர்களின் தலைகளில் சூடுவதற்கு ஏற்ற பயனைப் பெறுகின்றது. அவைகளைப் பறிக்காமல் விட்டுவிட்டால், வாடி, கீழே உதிர்ந்து, இந்த மண்ணிற்கு உரமாகின்றது.

அதுப்போல, மிக உயரிய எண்ணங்களைக் கொண்ட மேன்மக்கள், தங்களது உயர்வான செயல்களால், மற்றவர்களால் அடையாளம் காணப்பட்டு, அவர்களால் மதிக்கப்படக் கூடிய நிலையில், மற்றவர்களுக்கு உபகாரமாக வாழ்வார்கள்.

இதிலே இன்னும் சிலர், வறுமை நிலைக் காரணமாக நகரத்தை விட்டு, காடுகளில் வசிக்க நேர்ந்தாலும், தங்களது உயரிய உள்ளத்தால், பொருளாதார ரீதியாக, தங்களை வெளிப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும், தங்களது உடல் உழைப்பைக் கொண்டு, இந்த உலகத்துக்கு உபகாரமாக சேவைகள் பல செய்துக் கொண்டு வாழ்வார்கள்.

இந்த இடத்தில் அவ்வையாரின் நீதிவெண்பா பாடல் நினைவுக்கு வருகின்றது.

அட்டாலும் பால்சுவையில் குன்றாது; அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார், நண்பு அல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

மனித வாழ்க்கையில் இரண்டு பிரிவுகள் உள்ளன என்று ஏற்கனவே பார்த்தோம். அவைகள் ப்ரவிருத்தி, நிவிருத்தி என இரண்டு மார்க்கங்கள் ஆகும்.

அவைகள், பொருளே நோக்கமாக வாழும் உலகியல் வாழ்க்கை ஒன்று. தெளிவு என்னும் ஞானத்தைப் பெறுவதை நோக்கமாக வாழும் அருளியல் வாழ்க்கை ஒன்று.

உலகியல் வாழ்க்கையில் உழலுபவர்கள் போல் அல்லமால், கற்கவேண்டிய அறிவு நூல்களைக் கற்று, கற்றுணர்ந்த பெரியோரை நாடி இருந்து, அவர்கள் வாயிலாக நல்லறிவு பெற்று, அருளியல் வாழ்க்கையை வாழுகின்றவர்கள், எப்போதும், இந்த உலகத்தில் நன்மை செய்யும் பொருட்டே வாழ்வார்கள்.

அதாவது, உயர்ந்த பொருள் எப்போதும் தன்னிலையில் உயர்ந்தே விளங்கும்.

பால் என்பது உயர்ந்த உணவுப் பொருள். எல்லோராலும் எக்காலத்தும் விரும்பப்படுவது. அந்தப் பாலைச் சுடச் சுடக் காய்ச்சினாலும், தனது சுவையில் மேம்பட்டு விளங்கும். சுவை சிறிதும் குன்றாது. சங்கு எனப்படுவது, எவ்வளவுதான் நெருப்பில் போட்டுச் சுட்டாலும், தனது வெண்மை நிறத்தில் சிறிதும் மாறாது. மற்ற பொருள்கள் எல்லாம், நெருப்பில் இட்டால் கரியாகிப் போகும்.

ஆக, இந்த உலகத்தார் யாராக இருந்தாலும், அவரவர் வினையின் பயனுக்கு ஏற்ப, இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் என்றாலும், சாதாரண உலகியல் அறிவு மட்டும் பெற்றவர்கள், தமது நிலையில் தாழ்வு வந்தபோது, தடுமாறுவார்கள்.

அதுவே, நல்லறிவு படைத்த மேன்மக்கள், உத்தமர்கள் இந்த உலகியல் வாழ்க்கையில், வாழத்தெரியாமல் கெட்டுப் போனாலும், வறுமையில் வாழ்ந்தாலும், பொருளாதார ரீதியில் மற்றவர்களுக்கு உதவ முடியா விட்டாலும், தங்களது உயரிய உள்ளத்தாலும், உடலாலும் உலகத்தாருக்கு இன்னும் உபகாரமாக, சிறப்பாக வாழ்வார்கள்.

எனவே, மேன்மக்கள் எப்போதும் மேன்மக்களே!

यदचेतनोऽपि पादैः स्पृष्टः प्रज्वलति सवितुरिनकान्तः /
तत्तेजस्वी पुरुषः परकृतनिकृतिं कथं सहते // 1.34 //

யத் சேதநோ(அ)பி பா**தை**: ஸ்புருஷ்ட: ப்ரஜ்வலதி சாவித்ரி நகாந்த: /
த தேஜஸ்வி புருஷ: பரக்ருத நிக்ருதிம் க**தம்** சகதே //1.34 //

தெளிவுரை:–

உணர்வற்ற ஒரு சூரியக் காந்தக்கல் கூட சூரியனின் கதிர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, அதன் வழியாக ஊடுருவுகின்ற ஒளியாற்றலானது ஒரு பொருளை எரிக்க முடியுமானால், விழிப்புணர்வும், சுய அறிவுப் பிரகாசமும் கொண்ட மனிதன் மற்றவர்களின் மூலமாக வருகின்ற ஏமாற்றத்தை எப்படிப் பொருத்துக் கொள்வான்? எனவே, அநீதிகளைக் கண்டு கொதித்து எழுவான். அவனது ஆதங்கத்தை ஏதேனும் ஒரு வகையில் கட்டாயம் வெளிப்படுத்துவான்.

जातिर्यातु रसातलं गुणगणस्तस्याप्यधो गच्छतु
शीलं शैलतटात्पतत्वभिजनः सन्दह्यतां वह्निना ।
शौर्ये वैरिणि वज्रमाशु निपतत्वर्थोऽस्तु नः केवलं
येनैकेन विना गुणास्तृणलवप्रायाः समस्ता इमे ॥ 1.35 ॥

ஜாதிர்யாது ரஸாதலம் **குண**கணைஸ்தத்ராப்ய**தோ க**ச்சது
சீலம் சைலதடாத்பதத்வ**பி**ஜன: ஸந்**த**ஹ்யதாம் வஹ்னினா /
ஸௌர்யே வைரிணி வஜ்ரம் ஆஸு நிபதத்வர்**தோ**ஸ்து ந: கேவலம்
யேனைகேன வினா **குண**ஸ்த்ருணலவப்ராயா: ஸமஸ்தா இமே // 1.35 //

தெளிவுரை:–

ஜாதிகளில் மிக உயர்ந்த ஜாதி மனித ஜாதி, அத்தகைய மனித இனம் நற்பண்புகளின் அடைப்படையில் மட்டுமே மிக உயர்ந்த ஜாதியாக மதிக்கப்படுகின்றது. ஆனால், அதே மனிதன் செல்வம், செல்வாக்கு போன்ற ஆடம்பரமான வாழ்க்கைகளில் ஆசைப்பட்டு, அற்ப செல்வங்களுக்காக, தன்னுடைய நல்ல நடத்தைகளை இழக்கின்றான்.

சுற்றங்களை எல்லாம் தீய வார்த்தைகளால் சுட்டெரிக்கின்றான். நல்ல உறவுகளை எல்லாம் நலிவடைய வைக்கின்றான். இவனைப் பொருத்தவரை செல்வங்களுக்காக, எல்லோரையும், அற்பமான புல்லைப் போன்று பார்க்கின்றான். இதுவே, இவனது ஆணவம் மற்றும் அறியாமை.

तानीन्द्रियाणि सकलानि तदेव कर्म
सा बुद्धिरप्रतिहता वचनं तदेव ।
अर्थोष्मणा विरहितः पुरुषः स एव
त्वन्यः क्षणेन भवतीति विचित्रमेतत् ॥ 1.36 ॥

தானீந்**த்**ரியாணி சகலானி த**தே**வ கர்ம
ஸா **புத்தி**ரப்ரதிஹதா வசனம் த**தே**வ /
அர்**தோ**ஷ்மணா விரஹித: புருஷ: ஸ ஏவ
த்வன்ய: க்ஷனேன **ப**வதீதி விசித்ரம் ஏதத் // 1.36 //

தெளிவுரை:–

அனைவருடைய புலன்களும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும், ஒவ்வொரு வருடைய சொல்லும், செயலும், புத்தியும் பலவாறாக மாறுபட்டு காணப்படுவதற்குக் காரணம், அவர்கள் அனைவருமே அற்ப மனதைக் கொண்டு, மனம் போன போக்கில் போய்க் கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் இவர்கள் ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டு காணப்படுகின்றார்கள். இது மிகவும் விசித்திரமானது. மனதின் விந்தையான விளையாட்டு.

यस्यास्ति वित्तं स नरः कुलीनः
स पण्डितः स श्रुतवान्–गुणज्ञः ।
स एव वक्ता स च दर्शनीयः
सर्वे गुणाः काञ्चनमाश्रयन्ते ॥ 1.37 ॥

யஸ்யாஸ்தி வித்தம் ஸ நர: குலீன:
ஸ பண்டித: ஸ ஸ்ருதவான்**கு**ணஜ்ஞ: /
ஸ ஏவ வக்தா ஸ ச **த**ர்ஸனீய:
ஸர்வே **கு**ணா: காஞ்சனம் ஆஸ்ரயந்தி // 1.37 //

தெளிவுரை:–

எந்த மனிதனிடத்தில் செல்வமும், செல்வாக்கும் உள்ளதோ? அவனே எல்லோராலும் மதிக்கக்கூடிய நிலையில் பெரிய மனிதனாக இந்த சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படுவான். இந்த சமுதாயத்தைப் பொருத்தவரை, அவனே நற்குலத்தோன், அவனே புலவன், அவனே அறிவாளி, அவனே பகுத்தறிவாளன், அவனே பேச்சாளன், அவனே அனைத்தையும் அறிந்தவன். ஆகவே, அவனது அத்தனை பெருமைகளும் அவனது பணத்தினாலேயே பயனடைகின்றன.

ஆனால், உண்மையான உத்தம சாதுக்கள், நேர்மையான பண்பாளர்களிடம் பணம் இல்லாத காரணத்தினால், இவனது வார்த்தைகளுக்கு இந்த சமுதாயம் செவி சாய்க்காது. ஆகவே, **பணம் பந்தியிலே! குணம் குப்பையிலே!** என்ற பழமொழியும் நினைவில் கொள்ளத் தக்கது.

दौर्मन्त्र्यान्नृपतिर्विनश्यति यतिः सङ्गात् सुतो लालनाद्–
विप्रोऽनध्ययनात् कुलं कुतनयाच्छीलं खलोपासनात् ।
ह्रीर्मद्यादनवेक्षणादपि कृषिः स्नेहः प्रवासाश्रयान्–
मैत्री चाप्रणयात् समृद्धिरनयात् त्यागप्रमादाद्धनम् ॥ 1.38 ॥

தௌர்மந்த்ரயான்ருபதிர் வினஸ்யதி யதி: ஸன**கா**த்ஸுதோ லாலனாத்
விப்ரோன**த்**யயனாத்குலம் குதனயாச்**சீ**லம் **க**லோபாஸனாத் ।
ஹ்ரீர்ம**த்**யா**த**னவேக்ஷணா**த**பி க்ருஷி: ஸ்னேஹ: ப்ரவாஸாஸ்ரயான்
மைத்ரீ சாப்ரணயாத்ஸம்ரு**த்தி**ரனயாத்த்யா**க**ப்ரமா**தாத்த**னம் ॥ 1.38 ॥

தெளிவுரை:–

ஒரு அரசன் தன்னுடைய நல்ல நிர்வாகத் திறமையின்மையால் அழிவை அடைகின்றான். ஒரு துறவி தன்னுடைய தவறான சகவாசத்தால் அழிவை அடைகின்றான். ஒரு நல்ல மகன் தாய், தந்தையின் அளவுகடந்த பாசத்தினால், கண்டிப்பு இல்லாமல் வளர்க்கப்பட்டு அழிவை அடைகின்றான். ஒரு பிராமணன் அத்யாத்ம கல்வியைக் கற்றுக் கொள்ளாத காரணத்தினால் அழிவை அடைகின்றான். ஒரு குடும்பம் மதுவினால் அழிவை அடைகின்றது. அதுப்போல, பணிவு இல்லாதவர்கள் தங்கள் ஆணவத்தினால் அழிவை அடைகின்றார்கள். ஆகவே, நட்பு, பாசம், படிப்பு, தியாகம் என எல்லாமே ஒருவர் அடையப்பட வேண்டிய அருமையான செல்வங்கள். மற்றபடி அழியக்கூடிய அற்ப செல்வங்கள் எல்லாமே ஒருவருக்கு அழிவை உண்டாக்குகின்றன.

दानं भोगो नाशस्तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीया गतिर्भवति ॥ 1.39 ॥

தானம் **போகோ** நாஸஸ்திஸ்ரோ **க**தயோ **ப**வந்தி வித்தஸ்ய ।
யோ ந **த**தாதி ந **பு**னக்தே தஸ்ய த்ருதீயா **க**திர்**ப**வதி ॥ 1.39 ॥

தெளிவுரை:–

தானம், இன்பம் மற்றும் அழிவு என்ற மூன்று வழிகள் உண்டு. இதிலே, சேர்த்த செல்வத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல், தான் மட்டுமே அந்த செல்வத்தை இன்பமாக அனுபவிக்க நினைப்பவனுக்கு, அவைகளினாலேயே அழிவு உண்டாகும்.

ஆகவே, பகிர்ந்துண்டு வாழும் பண்பு ஒன்றே, இன்னும் பல மடங்கு அவனுக்கு செல்வத்தை சேகரித்துக் கொடுக்கும்.

मणिः शाणोल्लीढः समरविजयी हेतिनिहतो
मदक्षीणो नागः शरदि सरिदाश्यानपुलिना ।
कलाशेषश्चन्द्रः सुरतमृदिता बालवनिता
तनिम्ना शोभन्ते गलितविभवाश्चार्थिषु जनाः ॥ 1.40 ॥

மணி: சாணோல்லீ**ட**: ஸமரவிஜயீ ஹேதினி ஹதோ
ம**த**க்ஷீணோ நா**க**: ஸர**தி** ஸரிதா: ஸ்யானபுலினா: /
கலாஸேஷஸ ச**ந்த்ர**: ஸுரதம்ரு**தி**தா **பா**லவனிதா
தனிம்னா ஸோ**ப**ந்தே **க**லிதவி**ப**வாஸ் சார்**தி**ஷு ஜனா: // 1.40 //

தெளிவுரை:–

சாணைக் கல்லில் தீட்டப்பட்ட மணியும், அம்பினால் தாக்கப்பட்ட பின்பும், போரில் வென்ற வீரனும், ரத்தினத்துக்காக கொல்லப்பட்ட பாம்பும், மதத்தினால் மெலிந்த யானையும், வெள்ளம் வடிந்த பின், மணல் திட்டுக்களிடையே ஓடும் ஆறும், ஒரு பிறையே எஞ்சிய மூன்றாம் பிறையும், காம கேளிக்கைகளில் மெலிந்த இளம் பெண்ணும், செய்த பல நன்கொடையினால் செல்வம் குன்றியோரும் என இவைகள் யாவுமே நலிந்தவைகளால் சிறப்படைகின்றன.

மணல் திட்டுக்கள் நடுவே ஆறு – வெள்ளம் வடிந்தபின் மணல் திட்டுக்களிடையே ஆறு தெளிவான நீரோடுவதால் சிறக்கும்.

परिक्षीणः कश्चित्स्पृहयति यवानां प्रसृतये
स पश्चात् संपूर्णः कलयति धरित्रीं तृणसमाम् ।
अतश्चानैकान्त्याद्गुरुलघुतयाऽर्थेषु धनिनाम्–
अवस्था वस्तूनि प्रथयति च संकोचयति च ॥ 1.41 ॥

பரிக்ஷீண: கஸ்சித்ஸ்ப்ருஹயதி யவானாம் ப்ரஸ்ருதயே
ஸ பஸ்சாத்ஸம்பூர்ண: கலயதி தரித்ரீம் த்ருணஸமாம் /
அதஸ்சானைகாந்த்யாத்குருலகுதயார்தஷு தனினாம்
அவஸ்தா வஸ்தூனி ப்ரதயதி ச ஸனகோசயதி ச // 1.41 //

தெளிவுரை:–

வறுமையினால் வாடுகின்ற ஒரு ஏழை விவசாயி கையளவு தானியம் விதைப்பதற்குக் கிடைத்தால்கூட போதுமென்று நினைக்கின்றான். பின்னர், அவனே விளைசலினால் செழிப்படைந்தபின், இந்த பூமியையே புல்லுக்கு நிகராகக் கருதுகின்றான்.

எனவே, விவசாயத்தில் விழையும் பொருளின் பெருமையும், சிறுமையும் விவசாயியின் எண்ணத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பதினால், அவனது மனதிற்கு ஏற்றவாறு விவசாயம் பெருகியோ, சுருங்கியோ காணப்படுகின்றது எனலாம்.

இதுப்போல, ஒருவனின் சிறுமையும், பெருமையும் அவனது மனதைப் பொருத்தே அமைகின்றது.

राजन् दुधुक्षसि यदि क्षितिधेनुमेतां
तेनाद्य वत्समिव लोकममुं पुषाण ।
तस्मिंश्च सम्यगनिशं परिपोष्यमाणे
नानाफलैः फलति कल्पलतेव भूमिः ॥ 1.42 ॥

ராஜன் **துது**க்ஷஸி ய**தி** க்ஷிதி**தே**னு ஏதாம்
தேனா**த்**ய வத்ஸம் இவ லோகம் அமும் புஷாண
தஸ்மிம்ஸ்ச ஸம்ய **க**னிஸம் பரிபோஷ்ய மாணே
நானா **ப**லை: **ப**லதி கல்பலதேவ **பூ**மி: ॥ 1.42 ॥

தெளிவுரை:–

அரசே! இந்தப் பூமி என்ற பசுவினைக் கறக்க விரும்புவாயாகில், முதலில், இவ்வுல மக்களை எல்லாம் கன்றெனப் பேணுவாய். அவ்வாறு, எல்லா வகையிலும், இந்த உலகத்துக்கு உபகாரமாக வாழ்ந்து, இந்த மக்களைக் காப்பாற்றுவாயாகில், இந்தப் பூமி எனும் கற்பக விருக்ஷம் உனக்கு வேண்டியவைகளை எல்லாம் தரும்.

सत्यानृता च परुषा प्रियवादिनी च
हिंस्रा दयालुरपि चार्थपरा वदान्या ।
नित्यव्यया प्रचुरनित्यधनागमा च
वाराङ्गनेव नृपनीतिरनेकरूपा ॥ 1.43 ॥

ஸத்யான்ருதா ச பருஷா ப்ரியவா**தி**னீ ச
ஹிம்ஸ்ரா **த**யாலுரபி சார்**த**பரா வ**தா**ன்யா /
நித்யவ்யயா ப்ரசுரனித்ய**த**னா**க**மா ச
வாரான**க**னேவ ந்ருபனீதிரனேகரூபா // 1.43 //

தெளிவுரை:–

அரசனிடம் இருக்கின்ற செல்வம் எல்லாவகையிலும் வேசியர் போன்று பல உருவங்கள் எடுக்கும். அது எப்படியெனில், மெய்யனாக, பொய்யனாக, கடுஞ்சொல்லோனாக, இன்சொல்லோனாக, கொடியவனாக, கருணையுள்ளவனாக, கஞ்சனாக, ஈகைய உள்ளவனாக, என்றும் செலவாளியாக, என்றும் பெருஞ்செல்வம் ஈட்டுவோனாக – அரசனின் நீதி, வேசியர் போன்று, பல்லுருவங்கள் ஏற்குமே.

आज्ञा कीर्तिः पालनं ब्राह्मणानां
दानं भोगो मित्रसंरक्षणं च /
येषामेते षड्गुणा न प्रवृत्ताः
कोऽर्थस्तेषां पार्थिवोपाश्रयेण // 1.44 //

ஆஜ்ஞா கீர்தி: பாலனம் **ப்**ராஹ்மணானாம்
தானம் **போகோ** மித்ரஸம் ரக்ஷணம் ச
யேஷாம் ஏதே ஷ**ட்கு**ணா ந ப்ரவ்ருத்தா:
கோர்**த**ஸ் தேஷாம் பார்**தி**வோ பாஸ்ரயேண // 1.44 //

தெளிவுரை:–

ஆளுமை, புகழ், ஞானிகளைப் போற்றுதல், தானம், இன்பம், நட்பு ஆகிய ஆறு நற்பண்புகளும் எந்த அரசனிடத்தில் இல்லையோ? அத்தகைய அரசனை அண்டியவருக்குப் பயன்தான் என்ன?

यद्धात्रा निजभालपट्टलिखितं स्तोकं महद्वा धनं
तत् प्राप्नोति मरुस्थलेऽपि नितरां मेरौ ततो नाधिकम् /
तद्धीरो भव वित्तवत्सु कृपणां वृत्तिं वृथा मा कृथाः
कूपे पश्य पयोनिधावपि घटो गृह्णाति तुल्यं जलम् // 1.45 //

யத் தாத்ரா நிஜ**பா**ல பட்ட லி**கி**தம் ஸ்தோகம் மஹ**த்**வா **த**னம்
தத் ப்ராப்னோதி மருஸ்**த**லேபி நிதராம் மேரௌ ததோ நா**தி**கம் /
தத் தீரோ **ப**வ வித்த வத்ஸு க்ருபணாம் வ்ருத்திம் வ்ரு**தா** ஸா க்ரு**தா**:
கூபே பஸ்ய பயோனி **தா**வபி **க**டோ **க்**ருஹ்ணாதி துல்யம் ஜலம் // 1.45 //

தெளிவுரை:–

உனது தலையெழுத்துப்படி, படைத்தவனால் எவ்வளவு செல்வம் உனக்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளதோ? அந்த செல்வத்தின் அளவு சிறிதோ? அல்லது பெரிதோ? அதன்படி, நீ இருப்பது கடுமையான பாலைவனமாகிலும், அது உனக்குக் கண்டிப்பாக கிடைக்கும். அதுவே, அனைத்து செல்வ வளங்களும் கொண்ட மேரு மலை மீதே நீ இருந்தாலும், உனக்கு கிடைக்கக்கூடாது என்ற விதி இருந்தால், நிச்சயமாக அந்த செல்வம் உனக்கு கிடைக்காது.

எனவே, உனக்கு என்ற விதிக்கப்பட்ட வாழ்க்கையை நீ தைரியமாக வாழ்ந்துக் கொண்டிரு. தேவையில்லாமல், செல்வந்தர்களிடம் உதவி கேட்டு, உன்னை நீ வீணாகத் தாழ்த்திக் கொள்ளாதே.

ஆக, கிணறாக இருந்தாலும், கடலாக இருந்தாலும், உன்னிடமுள்ள குடம் எவ்வளவு தண்ணீரை பிடிக்குமோ? அவ்வளவு தண்ணீரைத்தான் உன்னால் எடுத்துக் கொள்ள முடியும் என்பதை அறிவாயாக.

त्वमेव चातकाधारोसीति केषां न गोचरः /
किमम्भोद–वरास्माकं कार्पण्योक्तिं प्रतीक्षसे // 1.46 //

த்வமேவ சாதகா **தா**ரோ ஸீதி கேஷாம் ந **கோ**சர: /
கிம் அம்**போத**வராஸ்மாகம் கார்பண் யோக்தம் ப்ரதீக்ஷஸே // 1.46 //

தெளிவுரை:–

கார்முகிலே! நீயே இந்த பூமியிலுள்ள நீர் நிலைகளுக்கு ஆதாரம் என்பதினால், மழையாகப் பொழிந்து, இந்த பூமியில் வாழும் செடி, கொடிகள், மரம் என எல்லா உயிரினங்களை வாழ்விக்கின்றாய் என்பது எல்லோருக்கும் தெரியாது. அப்படி இருக்க, நீர் நிலைகளுக்கு ஆதாரமான மேகக்கூட்டங்களே நீங்கள் ஏன் இந்த தட்சனின் பணிவான வேண்டுகோளுக்காகக் காத்திருக்கின்றாய் சொல்.

रे रे चातक सावधानमनसा मित्र क्षणं श्रूयताम्–
अम्भोदा बहवो हि सन्ति गगने सर्वेऽपि नैतादृशाः ।
केचिद्वृष्टिभिरार्द्रयन्ति वसुधां गर्जन्ति केचिद्वृथा
यं यं पश्यसि तस्य तस्य पुरतो मा ब्रूहि दीनं वचः ॥ 1.47 ॥

ரே ரே சாதக ஸாவ**தா**ன மனஸா மித்ர க்ஷணம் ஸ்ரூயதாம்
அம்போதா பஹவோ வஸந்தி **கக**னே ஸர்வேபி நைதா**த்**ருஸா: ।
கேசி**த்** வ்ருஷ்டி **பி**ரார்**த்**ரயந்தி வசு**தாம் க**ர்ஜந்தி கேசி**த்**வ்ரு**தா**
யம் யம் பஸ்யஸி தஸ்ய தஸ்ய புரதோ மா **ப்**ரூஹி **தீ**னம் வச: ॥ 1.47 ॥

தெளிவுரை:–

ஏ நண்பா, சிறிது நேரம் கவனமாகக் கேள். வானத்தில் பல முகில்கள் உள்ளன. அனைத்தும் ஒரே வகையானவையல்ல. சில, மேகங்கள மழை பொழிந்து, இந்த பூமியை நனைக்கின்றன. இன்னும் சில மேகங்கள் மழை நீரைப் பொழியாமல், வீணாக உறுமுகின்றன. ஆகவே, நீங்கள் பார்க்கும் எதுவாக இருந்தாலும், அவைகளுக்கு முன்னர் தாழ்வான வார்த்தைகளை பேசாதே.

இது மழையைப் பற்றிய கருத்தல்ல. இங்கு மழை மேகங்களுக்கு ஒப்பீடு செய்து, கொடை வள்ளல்களைப் பற்றி பேசுகின்றார் என்று பார்க்க முடிகின்றது. சில கொடை வள்ளல்கள் பிரதிபலன் கருதா உதவிகள் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். இன்னும் சிலரோ, தங்களுக்கு ஏதேனும் ஆதாயம் வருமென்றால், அப்போது மட்டுமே கொடுப்பதை விரும்புவார்கள். ஆகவே, யாசகம் கேட்கின்ற சாது யார் உண்மையாகவே வள்ளல் என்று தெரிந்து, அவரிடம் யாசகம் பெற வேண்டும். அதைவிடுத்து, பகட்டுக்காகவும், விளம்பரத்துக்காகவும் உதவிகள் புரிகின்றவர்களைக் கண்டால், அவர்கள் வீணாக உறுமுகின்ற மேகக் கூட்டங்கள் போன்றவர்கள் என்று கண்டு கொள்வாயாக என்கின்றார்.

अकरुणत्वमकारणविग्रहः परधने परयोषिति च स्पृहा ।
सुजनबन्धुजनेष्वसहिष्णुता प्रकृतिसिद्धमिदं हि दुरात्मनाम् ॥ 1.48 ॥

அகருணத்வம் அகாரண வி**க்**ரஹ: பர**த**னே பரயோஷிதி ச ஸ்ப்ருஹா ।
ஸுஜன**பந்து** ஜனேஷ் வஸஹிஷ்ணுதா ப்ரக்ருதி ஸி**த்தம் இதம்** ஹி **து**ராத் மனாம் ॥ 1.48 ॥

தெளிவுரை:–

கருணையின்மை, காரணமின்றி பகைமை, பிறர் செல்வம், பிறன்மனை மீது ஆசை, நன்மக்கள் மற்றும் உற்றாரிடம் பொறாமை, இவையெல்லாம் தீயவுள்ளத்தோருக்கு இயல்பாகவே இருக்கின்ற குணங்களாகும்.

दुर्जनः परिहर्तव्यो विद्यया भूषितोऽपि सन् ।
मणिनालंकृतः सर्पः किमसौ न भयङ्करः ॥ 1.49 ॥

துர்ஜன: பரிஹர்தவ்யோ வி**த்**யயா லக்ருதோபி ஸன் ।
மணினா அலங்க்ருத: ஸர்ப: கிம் அஸௌ ந **ப**யங்கர: ॥ 1.49 ॥

தெளிவுரை:–

ஒரு தீயவன் கல்வியெனும் அறிவால் அலங்கரிக்கப்படிருந்தாலும், அவனை தவிர்க வேண்டும். காரணம், அவன் இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட அச்சம் தரக்கூடிய பயங்கரமான பாம்பு.

அதாவது, தீயவர்கள் நன்கு படித்துவிட்டார்கள் என்று அவரிடம் சென்று, கற்றறிந்த சான்றோன் என நினைத்து உறவு கொண்டாடுவது, ஒரு விசமான பாம்பு இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்று உறவு கொண்டாடுவதற்கு சமம்.

जाड्यं ह्रीमति गण्यते व्रतरुचौ दम्भः शुचौ कैतवं
शूरे निर्घृणता मुनौ विमतिता दैन्यं प्रियालापिनि ।
तेजस्विन्यवलिप्तता मुखरता वक्तर्यशक्तिः स्थिरे
तत्को नाम गुणो भवेत्स गुणिनां यो दुर्जनैर्नाङ्कितः ॥ 1.50 ॥

ஜாட்யம் ஹ்ரீமதி **க**ண்யதே வ்ரதருசௌ **த**ம்**ப**: சுசௌ கைதவம்
சூரே நிர்**க்**ருணதா முனௌ விமதிதா **தை**ன்யம் ப்ரியாலாபினி ।
தேஜஸ்வின்யவலிப்ததா மு**க**ரதா வக்தர்யஸக்தி: ஸ்**தி**ரே
தத்கோ நாம **கு**ணோ **ப**வேத்ஸ **கு**ணினாம் யோ **து**ர்ஜனைர்னாங்கித: ॥ 1.50 ॥

தெளிவுரை:–

தீயவர்கள் திறமையான கல்விமான்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும்போது, அடக்கத்தினை மடமை என்றும், நோன்பு நோற்றலை ஏமாற்றுதல் என்றும், தூய்மையை பாசாங்கு என்றும், வீரத்தினைக் கொடுமை என்றும், துறவினை அறிவின்மை என்றும், இன்சொல் உரைத்தலை தாழ்மை (ஏழ்மை) என்றும், திறமையை இறுமாப்பு என்றும், பேச்சுத் திறனை வாயாடித்தனமென்றும், உறுதியை இயலாமை என்றும் கூறுவர்.

ஆகவே. தீயோரால் பழித்துரைக்கப்படாத நற்பண்புகளும் உள்ளதா? இவர்களுக்கு சாதகமான தீயவைகள் எல்லாம், தங்களுக்கான நற்பண்புகள் என்று கருதிக் கொள்வார்கள்.

लोभश्चेदगुणेन किं पिशुनता यद्यस्ति किं पातकैः
सत्यं चेत्तपसा च किं शुचि मनो यद्यस्ति तीर्थेन किम् ।
सौजन्यं यदि किं निजैः स्वमहिमा यद्यस्ति किं मण्डनैः
सद्विद्या यदि किं धनैरपयशो यद्यस्ति किं मृत्युना ॥ 1.51 ॥

லோப**ஸ்** சேத **கு**ணேன கிம் பிசுனதா **யத்** யஸ்தி கிம் பாதகை:
ஸத்யம் சேத் தபஸா ச கிம் சுசி மனோ **யத்** யஸ்தி **தீர்தே**ன கிம் /
ஸௌ ஜன்யம் **யதி** கிம் **கு**ணை: ஸ்வ மஹிமா **யத்** யஸ்தி கிம் மண்**ட**னை:
ஸத் வித்யா **யதி** கிம் **த**னைர பயஸோ **யத்** யஸ்தி கிம் ம்ருத்யுனா // 1.51 //

தெளிவுரை:–

ஒருவனிடம் பேராசை என்ற ஒரு தீய குணம் இருப்பின், அவனிடம் இருக்கின்ற மற்ற தீய பண்புகள் எல்லாம் இதற்கு ஈடாக இருக்க முடியாது. அதுப்போல, அவதூறு பரப்புகின்ற செயலை ஒருவன் செய்வான் என்றால், அதைவிட பாவங்கள் வேறொன்று இருக்க முடியாது. தவ வாழ்க்கை வாழுகின்ற துறவிகளிடம் உண்மை இல்லை என்றால், இவர்களைவிட தீயவர்கள் இந்த உலகத்தில் இருக்க முடியாது. புண்ணிய நதிகளில் நீராடுகின்றவர்களின் உள்ளத்தில் தூய்மை இல்லை என்றால், இவர்களைவிட அசுத்தமானவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆதலால், இவர்களால், அந்த தூய நதியே அசுத்தம் அடைகின்றது.

பேராசையை மிஞ்சிய தீய பண்பு இல்லை.
அவதூறு பகர்வதினும் பெரிய பாவமில்லை.
நல்லுள்ளம் உண்டாகில் யாவரும் சுற்றமே.
பழி சாவுக்கு நிகர்.

शशी दिवसधूसरो गलितयौवना कामिनी
सरो विगतवारिजं मुखमनक्षरं स्वाकृतेः ।
प्रभुर्धनपरायणः सततदुर्गतः सज्जनो
नृपाङ्गणगतः खलो मनसि सप्त शल्यानि मे ॥ 1.52 ॥

ஸசீ **தி**வஸ **தூ**ஸரோ **க**லித யௌவனா காமினீ
ஸரோ வி**க**த வாரிஜம் மு**க**ம் அனக்ஷரம் ஸ்வாக்ருதே: ।
ப்ர**பு**ர்**த**னபராயண: ஸதத**து**ர்**க**த: ஸஜ்ஜனோ
ந்ருபான **க**ண**க**த: **க**லோ மனஸி ஸப்த ஸல்யானி மே ॥ 1.52 ॥

தெளிவுரை:–

பகலில் மங்கலாகத் தெரிகின்ற நிலவு, இளமையை இழந்த அழகி, தாமரையற்றத் தடாகம், கல்வி அறிவற்றவன், பொருளீட்டலே நோக்கமாகக் கொண்டவன், வறுமையில் வாடும் நல்லவர்கள், அரசவையில் இடம்பெற்ற தீயவன் – இவ்வேழும் எனதுள்ளத்தைத் துளைக்கும் அம்புகள்.

न कश्चिच्चण्डकोपानामात्मीयो नाम भूभुजाम् ।
होतारमपि जुह्वानं स्पृष्टो दहति पावकः ॥ 1.53 ॥

ந கஸ்சிச் சண்**ட**கோபானாம் ஆத்மீயோ நாம **பூபு**ஜாம் ।
ஹோதாரம் அபி ஜுஹ்வானம் ஸ்ப்ருஷ்டோ வஹதி பாவக: ॥ 1.53 ॥

தெளிவுரை:–

வேள்விகள் செய்கின்ற வேதிகளுக்கும்கூட நெருப்பு, தொட்டாற் சுடும். அதுப்போல, மிகுந்த கோபம் கொண்ட அரசனிடம், அவனுக்கு வேண்டியவர்களும்கூட நெருங்க அஞ்சுவார்கள்.

मौनान्मूकः प्रवचनपटुश्चाटुलो जल्पको वा
धृष्टः पार्श्वे भवति च वसन्दूरतोप्यप्रगल्भः ।
क्षान्त्या भीरुर्यदि न सहते प्रायशो नाभिजातः
सेवाधर्मः परमगहनो योगिनामप्यगम्यः ॥ 1.54 ॥

மௌனௌள மூக: ப்ரவசன படுர் **பா**டுலோ ஜல்பகோ வா
த்ருஷ்ட: பார்ஸ்வே வஸதி ச ஸ**தா தூ**ரதஸ் சாப்ர **கல்ப**: /
க்ஷாந்த்யா **பீ**ருர்ய**தி** ந ஸஹதே ப்ராயஸோ நா**பி** ஜாத:
ஸேவா **த**ர்ம: பரம **க**ஹனோ யோ**கி**னாம் அப்ய **க**ம்ய: // 1.54 //

தெளிவுரை:–

தீயவர்கள் தங்களது வார்த்தைகளை மாற்றி பேசுவார்கள். அது எப்படியெனில், பேசாதிருந்தால் ஊமையென்றும், பேச்சுத்திறன் மிக்கவராக இருந்தால் வம்பன், வாயாடியென்றும், அருகில் சென்றால் மதிப்பறியாதவன் என்றும், தூர நின்றால், பயந்தவனென்றும், பொறுமையாயிருந்தால், கோழையென்றும், கோபத்தில் கொதித்து எழுந்தால் நற்பண்புகளற்றவனென்றும், இந்த தீயவர்கள் சொல்வார்கள். இவர்களை யோகிகள்கூட அணுக விரும்ப மாட்டார்கள்.

उद्भासिताखिलखलस्य विश्रृङ्खलस्य
प्राग्जातविस्मृतनिजाधमकर्मवृत्तेः /
दैवादवाप्तविभवस्य गुणद्विषोऽस्य
नीचस्य गोचरगतैः सुखमास्यते कैः // 1.55 //

உ**த்பா**ஸிதா **கி**ல**க**லஸ்ய விஸ்ருன **க**லஸ்ய
ப்ரா**க்** ஜாதவிஸ்த்ருதனி ஜா**த**மகர் மவ்ருத்தே: /
தைவா**த** வாப்த விபவஸ்ய **குணத்** விஷோஸ்ய
நீசஸ்ய **கோ**சர **க**தை: ஸு**கம்** ஆப்யதே // 1.55 //

தெளிவுரை:–

அனைத்துத் தீயவர்களையும் மிஞ்சுகின்ற தீயவன், தான் செய்த தீய செயல்களைப் பற்றி கவலைப்படாமல் இருப்பவன், அதிகாரத்தினால் அக்கிரமங்கள் பல செய்பவன், நல்ல பண்புகளை வெறுப்பவன் இவர்களைப் போன்ற இழிவானவர்கள் இருக்கின்ற வரைக்கும், நல்லவர்கள் யார்தான் மகிழ்ச்சியைக் காண முடியும்?

आरम्भगुर्वी क्षयिणी क्रमेण लघ्वी पुरा वृद्धिमती च पश्चात् /
दिनस्य पूर्वार्धपरार्धभिन्ना छायेव मैत्री खलसज्जनानाम् // 1.56 //

ஆரம்**பகு**ர்வீ க்ஷயிணீ க்ரமேண ல**க்**வீ புரா வ்ருத்**தி**மதீ ச பஸ்சாத் /
தினஸ்ய பூர்வார்**த** பரார்**த பன்**னா **சா**யேவ மைத்ரீ **க**ல ஸஜ்ஜனானாம் // 1.56 //

தெளிவுரை:–

ஒரு மனிதன் பகல் பொழுதில் வெளியே செல்லும்போது, அவனது முற்பகல் நிழல், முதலில் நீண்டும், பிறகு சூரியன் உச்சிக்கு வர, வர அவனுடைய நிழல் மெல்ல, மெல்ல சிறியதாக சுருங்கி, உச்சி நேரத்தில் நிழலே இல்லாமலும், பிறகு அவனுடைய நிழம் படிப்படியான அதிகரித்து, மீண்டும் அவனது நிழல் நீண்டுக்கொண்டு வருவதுப் போல, முறையே தீயோரின் நட்பு படிப்படியாகத் தேயும், நல்லோரின் நட்பு படிப்படியாக வளருமென பார்க்க முடிகின்றது. ஆனால், ஞானிகளுடைய நட்பு, உச்சி வெயில்போல, எல்லோரிடமும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், எப்போதும் ஒன்று போலவே இருக்கும்.

मृगमीनसज्जनानां तृणजलसन्तोषविहितवृत्तीनाम् /
लुब्धकधीवरपिशुना निष्कारणवैरिणो जगति // 1.57 //

ம்ரு**க** மீன ஸஜ்ஜனானாம் த்ருண ஜல ஸந்தோஷ விஹித வ்ருத்தீனாம் /
லு**ப்தகதீ** வரபிசுனா நிஷ்காரண வைரிணோ ஜ**க**தி // 1.57 //

தெளிவுரை:–

புல்லை உண்ணும் மானுக்கும், நீரில் வாழும் மீனுக்கும், நிறைவோடு வாழும் நல்லவருக்கும், முறையே வேடன், மீனவன் மற்றும் தீயோரால், காரணமின்றி பகைமை இருப்பது என்றென்றும் இந்த உலகில் இருக்கின்றது.

वाञ्छा सज्जनसङ्गमे परगुणे प्रीतिर्गुरौ नम्रता
विद्यायां व्यसनं स्वयोषिति रतिर्लोकापवादाद्भयम् /
भक्तिः शूलिनि शक्तिरात्मदमने संसर्गमुक्तिः खले
एते येषु वसन्ति निर्मलगुणास्तेभ्यो नरेभ्यो नमः // 1.58 //

வாஞ்**சா** ஸஜ்ஜனஸன**க**மே பர**கு**ணே ப்ரீதிர்**கு**ரௌ நம்ரதா
வி**த்**யாயாம் வ்யஸனம் ஸ்வயோஷிதி ரதிர்லோகாபவா**தாத்ப**யம் /
பக்தி: சூலினி சக்திராத்ம**த**மனே ஸம்ஸர்**க** முக்தி: **க**லே
யேஷ்வேதே நிவஸந்தி நிர்மல **கு**ணாஸ் தே**ப்**யோ நரே**ப்**யோ நம: // 1.58 //

தெளிவுரை:–

நல்லவர்களின் தொடர்பை உண்டாக்கிக் கொள்ளுதல், மற்றவர்களின் நற்பண்புகள் கண்டு, அவர்களிடம் அன்பு வைத்தல், கற்றறிந்த சான்றோர்களை நேசித்தல் மற்றும் மூத்தோரிடம் பணிவு, அத்யாத்ம ஞானக் கல்வியைக் கற்பதில் ஆர்வம், தன் மனைவிமீது மட்டும் காதல், உலகத்தார் பழிச்சொல்லி விடுவார்கள் என்ற பயம், எதிரியை நடுங்க வைக்கின்ற ஆயுதப் பயிற்சியில் நாட்டம், சுயக்கட்டுப்பாடுடன் இருத்தல், தீயவர்களைக் கண்டால், அவர்களிடமிருந்து விலகுதல், ஆகிய இந்த நற்பண்புகள் எந்த மனிதர்களிடத்தில் இருக்கின்றனவோ? அவர்களை வணங்குகின்றேன்.

विपदि धैर्यमथाभ्युदये क्षमा सदसि वाक्पटुता युधि विक्रमः ।
यशसि चाभिरतिर्व्यसनं श्रुतौ प्रकृतिसिद्धमिदं हि महात्मनाम् ॥ 1.59 ॥

விப**தி தை**ர்யம் அ**தாப்யுத**யே க்ஷமா
ஸ**த**ஸி வாக்யபடுதா யு**தி** விக்ரம: ।
யஸஸி சா**பி**ருசிர் வ்யஸனம் ஸ்ருதௌ
ப்ரக்ருதி ஸி**த்தம்** இ**தம்** ஹி மஹாத்மனாம் ॥ 1.59 ॥

தெளிவுரை:–

துன்பத்தில் மனவலிமை குன்றாமல் பொறுமையுடன் இருத்தல், வாழ்க்கையில் செழிப்பான நிலைக்கு உயரும்போதும் மற்றவர்களிடம் பணிவு மற்றும் மன்னிக்கும் குணம் இருத்தல், சான்றோர்கள் நிறைந்த அவையில் பணிவுடன் பேசுதல், போரில் வீரம் காட்டுதல், பிறர் புகழ்ச்சியில் மனம் மயங்காதிருத்தல், வேதம் ஓதுவதில் ஆர்வம் போன்ற, இவைகள் எல்லாம் மேலோருக்குள்ள இயற்கையான குணங்கள்.

प्रदानं प्रच्छन्नं गृहमुपगते सम्भ्रमविधिः
प्रियं कृत्वा मौनं सदसि कथनं नाप्युपकृतेः ।
अनुत्सेको लक्ष्म्यां निरभिभवसाराः परकथाः
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम् ॥ 1.60 ॥

ப்ர**தா**னம் ப்ரச்**ச**ன்னம் **க்**ருஹம் உப**க**தே ஸம் **ப்**ரமவி**தி**:
ப்ரியம் க்ருத்வா மௌனம் ஸ**த**ஸி க**த**னம் சாப்யு பக்ருதே: ।
அனுத்ஸேகோ லக்ஷ்ம்யாம் அன**பி** பவ**க**ந்**தா**: பரக**தா**:
ஸதாம் கேனோ**த் தி**ஷ்டம் விஷமம் அஸி**தா** ராவ்ரதம் இ**தம்** ॥ 1.60 ॥

தெளிவுரை:–

வீடு தேடி வருகின்ற விருந்தினர்களை விருந்தோம்பல் பண்பினால், உபசரிப்பதும், செய்த உதவியை மற்றவர்களிரம் காட்டிக் கொள்ளாமல் இருப்பதும், தன்னைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்ளாமல் தவிர்த்தல், செல்வம் சேர்ந்தாலும் அடக்கம், பிறரைப் பற்றி எப்போதும் தரக்குறைவாகப் பேசாமல் இருத்தல் ஆகிய இத்தகைய உயரிய குணநலன்கள் நல்லோருக்கு இருக்கின்ற இயல்பு.

करे श्लाघ्यस्त्यागः शिरसि गुरुपादप्रणयिता
मुखे सत्या वाणी विजयि भुजयोर्वीर्यमतुलम् ।
हृदि स्वच्छा वृत्तिः श्रुतमधिगतं च श्रवणयोर्–
विनाप्यैश्वर्येण प्रकृतिमहतां मण्डनमिदम् ॥ 1.61 ॥

கரே ஸ்லா**க்**யஸ் த்யா**க**: சிரஸி **கு**ருபா**த** ப்ரணயிதா
மு**கே** ஸத்யா வாணீ விஜயி **பு**ஜயோர் வீர்யம் அதுலம் ।
ஹ்ரு**தி** ஸ்வச்**சா** வ்ருத்தி: ஸ்ருதிம் அ**திக**தம் ச ஸ்ரவணயோர்
வினாப்யை ஸ்வர்யேண ப்ரக்ருதி மஹதாம் மண்**ட**னம் **இத**ம் ॥ 1.61 ॥

தெளிவுரை:–

மேன்மக்களின் கைகளுக்கு கொடுக்கும் குணம் உண்டு, அவர்கள் தலைக்கு குருவின் பாதங்களை பணிகின்ற பண்பு உண்டு, அவர்கள் வாய் பேசும் பேச்சில் உண்மை எப்போதும் உண்டு, அவர்கள் தோள்களுக்கு உள்ள வலிமை வெற்றிக்கானது, அவர்கள் இதயத்தில் எப்போதும் தூய்மை, அவர்கள் செவிகளுக்கு வேத ஸ்ருதிகள் கேட்பதில் ஆர்வம் போன்ற இத்தகைய மேன்மை பொருந்திய அணிகலன்கள் என்றென்றும் மேன்மக்களின் இன்றியமையாத செல்வங்கள்.

सम्पत्सु महतां चित्तं भवत्युत्पलकोमलम् ।
आपत्सु च महाशैलशिलासङ्घातकर्कशम् ॥ 1.62 ॥

ஸம்பத்சு மஹதாம் சித்தம் **ப**வத் யுத்பல கௌமலம் ।
ஆபத்சு ச மஹாஸைல சிலா ஸன**கா**தகர்கஸம் ॥ 1.62 ॥

தெளிவுரை:–

மேன்மக்களின் உள்ளம், மற்றவர்களுக்கு உதவுகின்ற நிலையில் தாமரையைப் போன்று மென்மையாகவும், மற்றவர்களுக்கு ஆபத்து வந்தால், அதை தடுத்து காக்கின்ற நிலையில், பெரிய பாறாங்கல்லினைப் போன்று கடினமாகவும் இருக்கும்.

सन्तप्तायसि संस्थितस्य पयसो नामापि न श्रूयते
मुक्ताकारतया तदेव नलिनीपत्रस्थितं राजते ।
स्वात्यां सागरशुक्तिमध्यपतितं सन्मौक्तिकं जायते
प्रायेणाधममध्यमोत्तमगुणः संसर्गतो जायते ॥ 1.63 ॥

ஸந்தப்தாயஸி ஸம்ஸ்**தி**தஸ்ய பயஸோ நாமாபி ந ஜ்ஞூயதே
முக்தாகாரதயா த**தே**வ நலினீபத்ரஸ்**தி**தம் ராஜதே ।
ஸ்வாத்யாம் ஸா**க**ரசுக்திம**த்**யபதிதம் தன்மௌக்திகம் ஜாயதே
ப்ராயேணா**த**மம**த்**யமோத்தம**கு**ண: ஸம்ஸர்**க**தோ ஜாயதே ॥ 1.63 ॥

தெளிவுரை:–

பழுக்கக் காய்ந்த இரும்புத் துண்டின்மீது நீர் வீழ்ந்தால், அது வெப்பத்தின் காரணமாக, சிறிதும் அடையாளமின்றி ஆவியாகி மறைகின்றது. அதுவே, அந்த நீர் தாமரை இலையின்மீது வீழ்ந்தால், முத்துக்களைப்போல் ஒளிர்கின்றது. அதே நீர்த்துளி சுவாதி நட்சத்திர தினத்தன்று கடலில் சிப்பியினுள் வீழ்ந்தால், நல்ல முத்தாக மாறுகின்றது.

பொதுவாக, இழிந்த குணம், நடுத்தர குணம் மற்றும் உயர்ந்த குணம் ஆகிய இந்த மூன்றும், ஒருவர் வைக்கின்ற நட்பின் காரணமாக இவரிடம் உண்டாகின்றது. இந்த மூன்று குணங்களையும் சாஸ்திரம் கூறும்போது, தமோ, ரஜோ மற்றும் சத்துவம் என்கின்றது.

प्रीणाति यः सुचरितैः पितरं स पुत्रो
यद्भर्तुरेव हितमिच्छति तत्कलत्रम् ।
तन्मित्रमापदि सुखे च समक्रियं यद्-
एतत्त्रयं जगति पुण्यकृतो लभन्ते ॥ 1.64 ॥

ப்ரீணாதி ய: சுசரிதை: பிதரம் ஸ புத்ரோ
ய**த்ப**ர்துரேவ ஹிதம் இச்**ச**தி தத் கலத்ரம் ।
தன் மித்ரம் ஆப**தி** சு**கே** ச ஸமக்ரியம் ய**த்**
ஏதத் த்ரயம் ஜ**க**தி புண்யக்ருதோ ல**ப**ந்தே ॥ 1.64 ॥

தெளிவுரை:-

உத்தமர்களுக்கு தந்தையை மகிழ்விக்கும் நல்ல மகன், கணவனின் நன்மையை விரும்புகின்ற உண்மையான மனைவி, உயர்வு, தாழ்வு என இந்த இரு நிலைகளிலும் சமமாகப் பழகுகின்ற அருமையான நண்பன் ஆகியவைகள் மூன்றும் அவர்களின் புண்ணிப் பலன்களாகவே கிடைக்கின்றன.

नम्रत्वेनोन्नमन्तः परगुणकथनैः स्वान् गुणान् ख्यापयन्तः
स्वार्थान्सम्पादयन्तो विततपृथुतरारम्भयत्नाः परार्थे ।
क्षान्त्यैवाक्षेपरूक्षाक्षरमुखरमुखान्दुर्मुखान्दूषयन्तः
सन्तः साश्चर्यचर्या जगति बहुमताः कस्य नाभ्यर्चनीयाः ॥ 1.65 ॥

நம்ரத்வேனோன்னமந்த: பர**கு**ணக**த**னை: ஸ்வான்**கு**ணான்**க்**யாபயந்த:
ஸ்வார்**தா**ன்ஸம்பா**த**யந்தோ விததப்ரு**து**தராரம்**ப**யத்னா: பரார்**தே** ।
க்ஷாந்த்யைவாக்ஷேபருக்ஷாக்ஷரமு**க**ரமு**கா**ந்**து**ர்ஜனாந்**தூ**ஷயந்த:
ஸந்த: ஸாஸ்சர்யசர்யா ஜ**க**தி **ப**ஹுமதா: கஸ்ய நா**ப்**யர்சனீயா: ॥ 1.65 ॥

தெளிவுரை:-

உத்தமர்கள் தங்களுடைய பணிவினால் தன்னை உயர்த்திக்கொள்வார்கள், எல்லோரிடமும் தன்னுடைய நற்குணங்களைக் கொண்டு, நல்லவர்களின் நலனுக்காக வாழுதல், மற்றவர்களின் நலனுக்காக பெரிய, பெரிய முயற்சிகளைத் தொடக்கிவைத்து, அவர்களின் நலனில் அக்கரைக் கொள்ளுதல், கொடிய சொற்களினால் பிறரைத் தூற்றும் தீயோரைப் பொறுமையினால் வெல்லுதல், இத்தகைய வியக்கத்தக்க நல்ல நடத்தைகள் கொண்ட மேன்மக்களை, நல்லவர்களை எல்லோரும் வணங்குகின்றார்கள்.

भवन्ति नम्रास्तरवः फलोद्गमैर्–
नवाम्बुभिर्भूरिविलम्बिनो घनाः ।
अनुद्धताः सत्पुरुषाः समृद्धिभिः
स्वभाव एवैष परोपकारिणाम् ॥ 1.66 ॥

பவந்தி நம்ராஸ்தரவ: **ப**லோ**த்க**மைர்
நவாம்**பு**பிர்**தூ**ராவலம்**பி**னோ **க**னா: ।
அனு**த்த**தா: ஸத்புருஷா: ஸம்ரு**த்திபி**:
ஸ்வ**பா**வ ஏஷ பரோபகாரிணாம் ॥ 1.66 ॥

தெளிவுரை:–

பழுத்த பழங்களைக் கொண்ட மரங்கள், அந்தப் பழங்களை அனைவரும் அடைய வேண்டும் என்பதினால், அந்த மரங்களின் கிளைகள் தன்னை தாழ்த்தி, குனிந்திருக்கும். மேலும், புதிய நல்ல நீரைக் கொண்ட மேகக்கூட்டங்கள் மழையாகப் பொழிவதற்கு மிகவும் தாழ்வாக வரும். அதுப்போல, எவ்வளவு செல்வம் வந்தாலும், மேன்மக்கள் எப்போதும் பணிவு கொண்டவர்களாக இருப்பார்கள். இதுவே பிறர்க்கு உதவுவோரின் உண்மையான இயல்பு.

श्रोत्रं श्रुतेनैव न कुण्डलेन दानेन पाणिर्न तु कङ्कणेन ।
विभाति कायः करुणापराणां परोपकारैर्न तु चन्दनेन ॥ 1.67 ॥

ஸ்ரோத்ரம் ஸ்ருதேனைவ ந குண்**ட**லேன **தா**னேன பாணிர்ன து கனகணேன ।
வி**பா**தி காய: கருண பராணாம் பரோபகாரைர்ன து சந்**த**னேன ॥ 1.67 ॥

தெளிவுரை:–

காதுகளுக்கான உண்மையான அணிகலம் வேத, வேதாந்த விசயங்களைக் கேட்டலே, காதணிகளன்று. கைகளின் அணிகலன் கொடையே தவிர, கைகளுக்கு போடுகின்ற வளையல்கள் அன்று. அதுப்போல, மிக்க கருணை உடையவர்கள் உடலுக்கு அணிகலன் பிறர்க்கு உதவுதலே, சந்தனமன்று.

पापान्निवारयति योजयते हिताय
गुह्यं च गूहति गुणान्प्रकटीकरोति ।
आपद्गतं च न जहाति ददाति काले
सन्मित्रलक्षणमिदं प्रवदन्ति सन्तः ॥ 1.68 ॥

பாபான்னி வாரயதி யோ ஜயதே ஹிதாய
குஹ்யம் நிகூஹதி **கு**ணான் ப்ரகடீ கரோதி /
ஆப**த்க**தம் ச ந ஜஹாதி **ததா**தி காலே
ஸன்மித்ர லக்ஷணம் **இத**ம் ப்ரவ**த**ந்தி ஸந்த: // 1.68 //

தெளிவுரை:—

ஒரு நல்ல நண்பன் ஒருவனை பாவச் செயல்களில் ஈடுபட விடமாட்டான், நல்ல செயல்களை மட்டுமே செய்ய உதவுவான், மற்றவர்களின் அந்தரங்கத்தை காப்பான், நண்பனின் நற்பண்புகளை எடுத்துரைப்பான், துன்பம் வரும்போது கைவிடமாட்டான், சரியான நேரத்திற்கு உதவுவான். இதுப்போல, இருப்பவன்தான் உண்மையான ஒரு நல்ல நண்பனின் இலக்கணம்.

पद्माकरं दिनकरो विकचीकरोति
चन्द्रो विकासयति कैरवचक्रवालम् /
नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति
सन्तः स्वयं परहितेषु कृताभियोगाः // 1.69 //

ப**த்**மாகரம் **தி**னகரோ விகசீகரோதி
சம்**த்**ர்ப்வோலாஸயதி கைரவசக்ரவாலம் /
நாப்**ய**ர் **தி**தோ ஜல**த**ரோபி ஜலம் **ததா**தி
ஸந்த: ஸ்வயம் பரஹிதே விஹிதா**பி** யோ**கா**: // 1.69 //

தெளிவுரை:—

சூரியனைக் கண்டவுடன் தாமரை மலர்கள் மலர்கின்றன. இரவில் நிலவைக் கண்டவுடன் அல்லி மலர்கள் மலர்கின்றன. நீர்க்கொண்ட மேகங்கள் தானாகவே மழையைப் பொழிகின்றன. அதுப்போல, நல்லவர்கள் தானாகவே, பிறர்க்கு உதவ முன்வருகின்றனர்.

एते सत्पुरुषाः परार्थघटकाः स्वार्थं परित्यज्य ये
सामान्यास्तु परार्थमुद्यमभृतः स्वार्थाविरोधेन ये /
तेऽमी मानवराक्षसाः परहितं स्वार्थाय निघ्नन्ति ये
ये तु घ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे // 1.70 //

ஏதே ஸத்புருஷா: பரார்**த** **க**டகா: ஸ்வார்**த**ம் பரித்ய ஜந்ய யே
ஸாமான் யாஸ்து பரார்**த**ம் உ**த்**யமப்ருத: ஸ்வார்**தா**விரோ**தே**ன யே /
தேமீ மானுஷ ராக்ஷஸா: பரஹிதம் ஸ்வார்**தா**ய நி**க்**னந்தி யே
யே து **க்**னந்தி நிரர்**த**கம் பரஹிதம் தே கே ந ஜானீமஹே // 1.70 //

தெளிவுரை:–

பிறருடைய நன்மைக்காக, தன்னுடைய நன்மைகளை துறக்கின்ற நல்லவர்களும் இருக்கின்றார்கள். அதுவே, தன்னுடைய நலன் பாதிக்காதவாறு, பிறர் நலனுக்கு உதவுகின்ற சாமானியர்களும் இருக்கின்றார்கள். அதுவே, பிறர் நலனைப் பற்றி சிறிதும் அக்கரைக் கொள்ளாமல், தன்னுடைய சுயநலத்துக்காக மட்டுமே எதையும் செய்கின்ற தீயவர்களும் இருக்கின்றார்கள். ஆக, பிறருக்காக வாழாமல் தன்னுடைய சுய நலத்திற்காக வாழ்கின்றவர்களை வீணானவர்கள் என்று கூறாமல், வேறு என்னவென்று கூறுவது?

क्षीरेणात्मगतोदकाय हि गुणा दत्ताः पुरा तेऽखिलाः
क्षीरे तापमवेक्ष्य तेन पयसा स्वात्मा कृशानौ हुतः /
गन्तुं पावकमुन्मनस्तदभवद् दृष्ट्वा तु मित्रापदं
युक्तं तेन जलेन शाम्यति सतां मैत्री पुनस्त्वीदृशी // 1.71 //

க்ஷீரேணாத் ம**க**தோ**த**காய ஹி **கு**ணா **த**த்தா புரா தே**கி**லா
க்ஷீரோத்தாபம் அவேக்ஷ்ய தேன பயஸா ஸ்வாத்மா க்ருஸானௌ சுத: /
கந்தும் பாவகம் உன்மனஸ் **த****த**பவ**த்** **த்**ருஷ்ட்வா து மித்ராப**த**ம்
யுக்தம் தேன ஜலேன ஸாம்யதி ஸதாம் மைத்ரீ புன ஸத் வீ**த்**ருஸீ // 1.71 //

தெளிவுரை:–

தண்ணீரில் கலக்கப்பட்ட பால், தனது அனைத்து குணங்களையும், அந்த நீருக்களித்தது, பார்ப்பதற்கு அந்த நீரையும் பால் போன்று மாற்றுகின்றது. அதே பால் நெருப்பினால் காய்ச்சப்படும்போது, பாலின் துயரத்தை கண்ட நீர், தன்னையே ஆவியாக்கி அந்த நெருப்புக்கு அர்ப்பணிக்கத் துணிந்தது. அதைக் கண்டு, பொங்குகின்ற பாலை திரும்பவும் நீருற்றி தணித்த பின்பு, மீண்டும் அந்த பால் சாந்தமடைந்தது. அதுப்போல, நல்லோரின் நட்பு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காதவாறு இவ்வாறு உதவுவார்கள்.

तृष्णां छिन्धि भज क्षमां जहि मदं पापे रतिं मा कृथाः
सत्यं ब्रूह्यनुयाहि साधुपदवीं सेवस्व विद्वज्जनम् ।
मान्यान्मानय विद्विषोऽप्यनुनय प्रच्छादय स्वान्-गुणान्-
कीर्तिं पालय दुःखिते कुरु दयामेतत्सतां लक्षणम् ।। 1.72 ।।

த்ருஷ்ணாம் **சிந்தி** பஜ க்ஷமாம் ஜஹி ம**த**ம் பாபே ரதிம் மா க்ரு**தா**:
ஸத்யம் **ப்**ரூஹ்யனு யாஹி ஸா**து** ப**த**வீம் ஸேவஸ்வ வி**த்**வஜ் ஜனம் /
மான்யான் மானய வி**த்**விஷோ ப்யனுனய ப்ரச்சாதய ஸ்வான் குணான்
கீர்திம் பாலய **து:கி**தே குரு **த**யாம் ஏதத் ஸதாம் லக்ஷணம் // 1.72 //

தெளிவுரை:–

உன்னுடைய தாகத்தைத் தணித்துக் கொள், பொறுமையைக் கடைப்பிடி, கர்வம் கொள்ளாதே, பாவச்செயலில் விருப்பம் கொள்ளாதே, உண்மை பேசு, சான்றோர்கள் காட்டிய வழியில் நட, கற்றோருக்குப் பணிவிடைகள் செய், மதிக்கத் தக்கோரை மதிப்பாயாக, எதிரியை மதிப்பாயாக, தற்பெருமை பேசாதே, உனக்கு கிடைத்த புகழைக் காப்பாற்றிக் கொள். துயரம் அடைகின்றவர்களிடம் கருணைக் கொள் – இவைகள் எல்லாமே நல்லோரின் இலக்கணம் ஆகும்.

मनसि वचसि काये पुण्यपीयूषपूर्णाः-
त्रिभुवनमुपकारश्रेणिभिः प्रीणयन्तः ।
परगुणपरमाणून्पर्वतीकृत्य नित्यं
निजहृदि विकसन्तः सन्ति सन्तः कियन्तः ।। 1.73 ।।

மனஸி வசஸி காயே புண்ய பீயூஷ பூர்ணாஸ்
த்ரி**பு**வனம் உபகார ஸ்ரேணி**பி**: ப்ரீணயந்த: /
பர**கு**ண பரமாணூன் பர்வதீ க்ருத்ய நித்யம்
நிஜஹ்ரு**தி** விகஸந்த: ஸந்தி ஸந்த: கியந்த: // 1.73 //

தெளிவுரை:–

மனம், சொல், மற்றும் செயல் ஆகியவைகளில் நன்மைகளைப் புரிகின்ற புண்ணியம் நிறைந்த நல்லோராக வெகு சிலரே இருக்கினர். அவர்கள் மட்டுமே இந்த மூவுலகத்தினையும் தமது உபகாரத்தினால் மகிழ்ச்சியாக அனுபவிப்பர். இவர்கள் என்றென்றும், பிறரிடம் இருக்கின்ற நற்பண்புகள் மிகச் சிறியவைகளாக இருப்பினும், அவைகளை வெளிக்கொண்டு வந்து, பெரிதாக்கி, தமது உள்ளத்துள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இவர்களே மேன்மக்கள் ஆவர்.

किं तेन हेमगिरिणा रजताद्रिणा वा
यत्राश्रिताश्च तरवस्तरवस्त एव ।
मन्यामहे मलयमेव यदाश्रयेण
कङ्कोलनिम्बकुटजा अपि चन्दनानि ।। 1.74 ।।

கிம் தேன ஹேம **கி**ரிணா ரஜ தா**த்**ரிணா வா
யத்ராஸ்ரிதாஸ்ச தரவஸ்தர வஸ்த ஏவ /
மன்யாமஹே மலயம் ஏவ ய**தா**ஸ்ரயேண
கனகோலனிம்**ப**குடுஜா அபி சந்**த**னானி // 1.74 //

தெளிவுரை:–

என்னதான் பொன்மலை, வெள்ளிமலை என உலோக மலைகள் பலவாக இருந்தாலும், அந்த மலைகளினால் என்ன பயன்? அவைகள் மிகவும் மதிப்புமிக்க மலையாக இருந்தாலும், இயற்கையின் இன்றியமையாத மண்ணால் ஆன மலையில் வளருகின்ற செடி, கொடிகள் மற்றும் மரங்கள் போன்றவைகளே படைக்கப்பட்ட உயிரினங்களை உண்மையாகவே வாழ்விக்கின்றன. அதாவது, அங்கு வளருகின்ற வால்மிளகு, வேம்பு மற்றும் எலுமிச்சை போன்றவைகளும் நறுமணத்தை அளிக்கின்ற விலை உயர்ந்த சந்தன மரங்களும் சர்வ ரோக நிவாரணியாக மற்ற உயிரினங்களுக்கு உதவுகின்றன.

அதுப்போல, பொன்னும், வெள்ளியும் எவ்வளவுதான் விலையுயந்த பொருளாகத் தன்னிடத்தில் வைத்திருக்கின்ற பெரும் பணக்காரங்கள் மற்ற உயிரினங்களுக்கு உதவாமல் வாழ்ந்து என்ன பயன்?

அதுவே, தன்னிடத்தில் பொருளாதார வசதி, வாய்ப்புகள் இல்லாவிட்டாலும், எல்லா உயிரினங்களுக்கும் உதவுகின்ற நல்லோர்கள் இந்த இயற்கையின் இன்றியமையாத கொடை.

रत्नैर्महार्हैस्तुतुषुर्न देवा
न भेजिरे भीमविषेण भीतिम् ।
सुधां विना न प्रययुर्विरामं
न निश्चितार्थाद्विरमन्ति धीराः ।। 1.75 ।।

ரத்னைர் மஹார்ஹைஸ்து துஷுர்ன **தே**வா
ந **பே**ஜிரே **பீ**மவிஷேண **பீ**திம் /
ஸு**தாம்** வினா ந பரயுர் விராமம்
ந நிஸ்சிதார்**தாத்** விரமந்தி **தீ**ரா: // 1.75 //

தெளிவுரை:–

பாற்கடலைக் கடையும்போது தோன்றிய விலை உயர்ந்த இரத்தினங்களால் தேவர்கள் நிறைவடையவில்லை. மேலும், அதனின்று தோன்றிய கொடிய நஞ்சுக்கும்

அவர்கள் அஞ்சவில்லை. அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் அந்த அமுதம் பெறும் வரை ஓயவே இல்லை.

அதுப்போல, மனவுறுதியுள்ள மேன்மக்கள் தங்களது நிச்சயித்த குறிக்கோளை அடையும் வரை ஓயமாட்டார்கள்.

क्वचिद्भूमीशायी क्वचिदपि च पर्यङ्कशयनः
क्वचिच्छाकाहारी क्वचिदपि च शाल्योदनरुचिः ।
क्वचित्कन्थाधारी क्वचिदपि च दिव्याम्बरधरो
मनस्वी कार्यार्थी गणयति न दुःखं न च सुखम् ।। 1.76 ।।

க்வசித் ப்ருத்**வீ**சாயி க்வசி**த**பி ச பர்யங்க சயன:
க்வசிச் **சா**காஹாரி க்வசி**த**பி ச சால்யோ **த**னருசி: /
க்வசித் கந்**தாதா**ரீ க்வசி**த**பி ச **தி**வ்யாம் **ப**ர**த**ரோ
மனஸவீ கார்யார்**தீ க**ணயதி ந **து:க**ம் ந ச சு**க**ம் // 1.76 //

தெளிவுரை:–

மேலோர் சில நேரங்களில் தரையில் படுப்பார்கள், சில நேரங்களில் கட்டிலில் படுப்பார்கள், சில நேரங்களில் காய்கறிகளை உண்பார்கள், சில நேரங்களில் அரிசி உணவை உண்பார்கள். சில நேரம் பழைய கிழிந்த துணிகளை உடுத்துவார்கள், சில நேரங்களில் மிகவும் விலை உயர்ந்த ஆடைகளை உடுத்துவார்கள். இவர்கள் தாங்கள் செய்கின்ற செயல்கள் எதுவாயினும், அதில் பற்று வைக்காமல், அவைகளினால் வருகின்ற இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகவே பார்ப்பார்கள். அதாவது, சந்தோசம் வரும்போது, ஆடுவதும், துக்கம் வரும்போது, துவண்டு போவதும் இவர்களிடம் என்றுமே கிடையாது.

ऐश्वर्यस्य विभूषणं सुजनता शौर्यस्य वाक्संयमो
ज्ञानस्योपशमः श्रुतस्य विनयो वित्तस्य पात्रे व्ययः ।
अक्रोधस्तपसः क्षमा प्रभवितुर्धर्मस्य निर्व्याजता
सर्वेषामपि सर्वकारणमिदं शीलं परं भूषणम् ।। 1.77 ।।

ஐஸ்வர்யஸ்ய வி**பூ**ஷணம் ஸுஜனதா செளர்யஸ்ய வாக் ஸம்யமோ
ஜ்ஞானஸ்யோபஸம: ஸ்ருதஸ்ய வினயோ வித்தஸ்ய பாத்ரே வ்யய: /
அக்ரோ**த**ஸ்தபஸ: க்ஷமா ப்ர**ப**வி**து**ர்**த**ர்மஸ்ய நிர்வாஜதா
ஸர்வேஷாமபி ஸர்வகாரணமி**த**ம் சீலம் பரம் **பூ**ஷணம் // 1.77 //

தெளிவுரை:–

மேன்மையின் அணிகலன் நற்பண்பு, வீரத்தின் அணிகலன் மன்னிப்பு, ஞானத்தின் அணிகலன் மனவமைதி, கேள்வியறிவின் அணிகலன் சொல்லடக்கம், செல்வத்தின் அணிகலன் கொடை, தவத்தின் அணிகலன் கோபம் கொள்ளாமை, அதிகாரத்தின் அணிகலன் பொறுத்தல், அறத்தின் அணிகலன் சுயநலமில்லாமை ஆக, அனைத்திற்கும் முலகாரணமான நல்லொழுக்கமே ஒருவனின் தலைசிறந்த அணிகலனாம்.

निन्दन्तु नीतिनिपुणा यदि वा स्तुवन्तु
लक्ष्मीः समाविशतु गच्छतु वा यथेष्टम् ।
अद्यैव वा मरणमस्तु युगान्तरे वा
न्याय्यात्पथः प्रविचलन्ति पदं न धीराः ।। 1.78 //

நிந்**த**ந்து நீதி நிபுணா ய**தி** வா ஸ்துவந்து
லக்ஷ்மீ: ஸமாவிஸது **கச்ச**து வா ய**தேஷ்டம்** /
அ**த்**யைவ வா மரணமஸ்து யு**கா**ந்தரே வா
ந்யாய்யாத் ப**த:** ப்ரவிசலந்தி ப**தம்** ந **தீ**ரா: // 1.78 //

தெளிவுரை:–

நீதி, நெறிமுறைகளில் திறமையானவர்கள் இருப்பின், அவர்கள் மற்றவர்களால் கண்டிக்கப்படட்டும், அல்லது அவர்களை மற்றவர்கள் புகழ்ந்து பேசட்டும். லட்சுமி அவள் விரும்பியபடி அவர்களிடம் வரட்டும் அல்லது வராமல் இருக்கட்டும். மேலும், அவர்களுக்கு மரணம் இன்று வருவதாக இருந்தாலும் சரி அல்லது இந்த யுக முடிவில் வருவதாக இருந்தாலும் சரி, அவர்கள் எடுத்த காரியத்தில் மன உறுதி கொண்டவர்கள் என்பதினால், என்றென்றும் நீதியின் பாதையில் இருந்து நழுவமாட்டார்கள்.

कदर्थितस्यापि हि धैर्यवृत्तेर्न शक्यते धैर्यगुणः प्रमार्ष्टुम् ।
अधोमुखस्यापि कृतस्य वह्नेर्नाधः शिखा याति कदाचिदेव ।। 1.79 ।।

க**தர்தி**த ஸ்யாபி ஹி **தைர்**ய வ்ருத்தேர்ந ஸக்யதே **தைர்**ய **கு**ண: ப்ரமார்ஷ்டும் /
அ**தௌ**மு**க** ஸ்யாபி க்ருதஸ்ய வஹ்னேர் நா**த: சிகா** யாதி க**தா**சி**தே**வ // 1.79 //

தெளிவுரை:–

தீயினை கீழ் நோக்கிப் பிடித்தாலும், அதன் சுடர் எப்போதும் மேல் நோக்கியே திரும்பும். அதுப்போல, மன உறுதி உள்ளவர்களை மற்றவர்கள் கீழாக நடத்தினாலும், அவர்கள் தங்களது மேலான மன உறுதியை ஒருபோதும் இழக்க மாட்டார்கள்.

कान्ताकटाक्षविशिखा न लुनन्ति यस्य
चित्तं न निर्दहति कोपकृशानुतापः ।
कर्षन्ति भूरिविषयाश्च न लोभपाशैर्-
लोकत्रयं जयति कृत्स्नमिदं स धीरः ।। 1.80 //

காந்தா கடாக்ஷ விசி**கா** ந லுனந்தி யஸ்ய
சித்தம் ந நிர்**த**ஹதி கோப க்ருஸானுதாப: /
கர்ஷந்தி **பூ**ரி விஷயாஸ்ச ந லோ**ப** பாஸைர்
லோகத்ரயம் ஜயதி க்ருத்ஸ்னமி**த**ம் ஸ **தீ**ர: // 1.80 //

தெளிவுரை:–

மன உறுதி உள்ளவர்களின் தூய மனதை மாயை எந்த வடிவத்திலும் மயக்க முடியாது. அந்த வகையிலே, ஒரு காதலியின் கடைக்கண் பார்வை எனும் அம்பு கூட அவர்களை துளைக்க முடியாது. அவர்களை கோபம் எனும் நெருப்பும் எரிக்க முடியாது. பேராசை என்ற கயிற்றினாலும் இவர்களை கட்ட முடியாது. அத்தகைய மனவுறுதி உள்ளவர்கள் இந்த மூவுலகங்களையும் வெல்கின்றார்கள்.

पातितोऽपि कराघातैरुत्पतत्येव कन्दुकः ।
प्रायेण साधुवृत्तानामस्थायिन्यो विपत्तयः ।। 1.81 ।।

பாதிதோ(அ)பி கரா**கா** தைருத்பதத்யேவ கந்துக:
ப்ராயேன சாது விருத்தானா நாம ஸ்தாயின்யோ விபத்தய: // 1.81 //

தெளிவுரை:–

கையினால் தரையில் தட்டி, அடிக்கப்பட்ட பந்து, மீண்டும் மேலே எழும்புவதுப் போல, நல்லவர்கள் வீழ்வதுப்போல காணப்பட்டாலும், அவர்கள் மீண்டும் மேலே எழுந்து வருவார்கள்.

वरं तुङ्गाच्छृङ्गादुरुशिखरिणः क्वापि विषमे
पतित्वायं कायः कठिनदृषदन्तर्विदलितः ।
वरं न्यस्तो हस्तः फणिपतिमुखे तीव्रदशने
वरं वह्नौ पातस्तदपि न कृतः शीलविलयः ।। 1.82 ।।

வரம் துங்காச்சங்கா **து**ருஷி**க**ரிந: குவாபி விஷமே
பதித்வாயம் காய: க**டி**ன**த**ஸ **த**ந்தர்விதலித: /
வரம் ந்யஸ்தோ ஹஸ்த: பனிபதிமு**கே** திவ்ர**த**ஸனே
வரம் வஹ்நெள பாதஸ்த**த**பி ந க்ருத: சீலவிலய: // 1.82 //

தெளிவுரை:–

உயர்ந்த மலையுச்சியில் இருந்து இந்த உடல் கடினமான தரையில் வீழ்ந்து, கடும் பாறைகளிடையே சிதறிப் போகலாம். மேலும், கொடிய மிருகத்தின் வாயில் உள்ள பற்களுக்கிடையே கை சிக்கிக் கொள்ளலாம். அல்லது கொடிய நெருப்பினில்கூட விழுந்து விடலாம். ஆனால், மேன்மக்கள் இதுப்போன்ற எந்த சூழ்நிலையிலும் தங்கள் நல்லொழுக்கத்தை மட்டும் கைவிட மாட்டார்கள்.

वह्निस्तस्य जलायते जलनिधिः कुल्यायते तत्क्षणात्-
मेरुःस्वल्पशिलायते मृगपतिः सद्यःकुरङ्गायते ।
व्यालो माल्यगुणायते विषरसः पीयूषवर्षायते
यस्याङ्गेऽखिललोकवल्लभतमं शीलं समुन्मीलति ।। 1.83 ।।

வஹ்னிஸ் தஸ்ய ஜலாயதே ஜலனி**தி**: குல்யாயதே தத்க்ஷணான்
மேரு: ஸ்வல்பஸி லாயதே ம்ரு**க**பதி: ஸ**த்**ய: குரங்**கா**யதே /
வ்யாலோ மால்ய **கு**ணாயதே விஷரஸ: பீயூஷவர்ஷாயதே
யஸ் யான**கேகி**ல லோக வல்ல**ப**தமம் சீலம் ஸமுன்மீலதி // 1.83 //

தெளிவுரை:–

யாரிடம் நல்லொழுக்கம் இருக்கின்றதோ? அவனிடம் நெருப்பு சுடாமல் குளிர்ச்சியான நீராகும், கடலும் அவனைப் பொருத்தவரை ஒரு ஓடையாகும், மேரு மலையும் சிறிய கல்லாகும், சிங்கமும் அவனிடம் மானாகும், பாம்பும் அவனிடம் மாலையாகும், நச்சு கலந்தச் சாறும் அவனுக்கு அமுதமாகும். இதுவே, நல்லவர்களுடைய மகத்துவம் ஆகும்.

छिन्नोऽपि रोहति तरुः क्षीणोऽप्युपचीयते पुनश्चन्द्रः ।
इति विमृशन्तः सन्तः सन्तप्यन्ते न विप्लुता लोके ।। 1.84 ।।

சின்னோ(அ)பி ரோஜஹ்டி தரு: க்ஷினோபயுபசியதே பூனச்சந்த்ர: /
இதி விம்ருஸந்த: சந்தப்யந்தே ந விப்லுதா லோகே // 1.84 //

தெளிவுரை:–

ஒரு மரம் வெட்டப்பட்டாலும், மீண்டும் அதன் கிளைகள் வளரும், அதுப்போல, நல்லவர்கள் மற்றவர்களால் துயரத்துக்கு உட்படுத்தப்பட்டாலும், மீண்டும் அவர்கள் தங்கள் நற் செயல்களை விடாமல் செய்வார்கள்.

नेता यस्य बृहस्पतिः प्रहरणं वज्रं सुराः सैनिकाः
स्वर्गो दुर्गमनुग्रहः खलु हरेरैरावतो वारणः /
इत्यैश्वर्यबलान्वितोऽपि बलभिद्भग्नः परैः सङ्गरे
तद्व्यक्तं ननु दैवमेव शरणं धिग्धिग्वृथा पौरुषम् // 1.85 //

நேதா யஸ்ய **ப்**ருஹஸ்பதி: ப்ரஹரணம் வஜ்ரம் ஸுரா: ஸைனிகா:
ஸ்வர்**கோ துர்கம்** அனு**க்**ரஹ: கில ஹரேரைராவதோ வாரண: /
இத்யை ஸ்வர்ய **ப**லான் விதோபி **பலபித்பக்**ன: பரை: ஸன**க**ரே
தத்வ்யக்தம் நனு **தை**வம் ஏவ சரணம் **திக்திக்**வ்**ருதா** பௌருஷம் // 1.85 //

தெளிவுரை:–

பிரஹஸ்பதி தேவர்களுக்கு வழிகாட்டுகின்ற குரு ஆவார். அத்தகைய தேவர்களின் தலைவனான இந்திரனுடைய ஆயுதம் வஜ்ராயுதம் எனும், இடி, மின்னல் போன்றவைகள். அத்துடன் இதுப்போன்ற மற்ற தேவர்களும் அவனுடைய வீரர்கள், சொர்க்கம் அவனுடைய கோட்டை, யானை அவனுடைய வாகனம். ஆயினும், செல்வமும், வலிமையும் கொண்ட அவனுக்கு அந்த குருவின் ஆசிகள் இல்லையென்றால், அவன் எதிரிகளால் போரில் தோற்கடிக்கப்படுவான். ஆகவே, அவனது விதியை மாற்றுகின்ற வல்லமை குருவுக்கு மட்டுமே உண்டு என்பதினால், அவரை சரணடையாமல், அவனிடமுள்ள ஆண்மையினைக் காட்டுவதினால் என்ன பயன்?

முதலில் குரு என்பவர் ஒரு தனிநபர் அல்ல. அது ஒரு தன்மை. **"அடங்கிய மனமே குரு! அறிவே இறைவன்"** என்பதை உணர்ந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு காலம் தேவைப்படுகின்றது.

பொதுவாக, எந்த ஒரு கலையையும் கற்றுக்கொடுக்க ஒரு நபர் தேவைப்படுகிறார். அவரை நாம் பொதுவாக குரு என்றோ அல்லது ஆசிரியர் என்றோ மரியாதை நிமித்தமாக அழைக்கின்றோம்.

ஆன்மிகத்திற்கும் அது அப்படியே பொருந்தும்.

ஆம், வாழ்க்கையை ஆனந்தமாக கொண்டாடி வாழும் மிக உயரிய கலையான **ஆன்மிகத்தை** கற்றுக்கொடுக்கவும் ஒரு நபர் தேவைப்படுகிறார் தானே?! அந்த நபரைத் தான் நாம் குருஜி என்றோ அல்லது ஆச்சாரியர் என்றோ அல்லது பகவான் என்றோ மரியாதையுடன் அழைக்கின்றோம். அவரை இறைவனுக்கு நிகராகக் கருதி வணங்கு கிறோம், அவரது கருத்துக்களை பின்பற்றுகிறோம்.

உண்மையில் உங்களை உங்களுக்குள் இருந்து எது வழிநடத்துகிறதோ? அதுவே உங்கள் குரு. அதனை உணர்ந்து கொள்கின்ற வரையிலும் உங்களுக்கு புறத்தில் ஒரு குரு தேவைப்படுகிறார். அவருடைய ஒரே வேலை, நீங்கள் உங்களுக்குள் இருக்கும் அந்த அக குருவை அடையாளம் கண்டு கொள்ள வைப்பது மட்டுமே.

அதனை நீங்கள் உணர்ந்து கொண்டு விட்டால், அதற்குப்பிறகு புற குருவின் வேலையென ஒன்றுமே இருக்காது. அந்த நொடியில் நீங்கள் ஞானம் அடைந்து இருப்பீர்கள். அந்த அக குருவைத்தான் மனம் என்கிறோம். அந்த வகையிலே, அதுவே நம் வாழ்க்கையின் அனைத்துக்கும் ஆதாரமாக இருக்கின்றது. **'உன் மதி எதுவோ? உன் கதி அதுவே',** இது அஷ்டாவக்ர கீதையின் அருமையான வார்த்தை. இது புரியும்போது, ஒருவனுக்கு தன்னை வழி நடத்துவது மனம் என்பதை நன்கு அறிவான். அந்த வகையிலே, தேவர்களுக்கு பிரகஸ்பதி, அசுரர்களுக்கு சுக்ராச்சாரியார் என குருமார்கள் இருப்பதுப் போல, நல்லவைகளை மனம் ஏற்றிக் கொண்டால், நமது மனம் பிரகஸ்பதியின் வழியிலே பயணிக்கின்றது. கெட்டதை நமது ஏற்றுக் கொண்டால், நமது மனம் அசுரர்களின் குரு சுக்கராச்சாரியாரியாரின் வழியில் பயணிக்கின்றது என்பதையும் எளிதாக அறியலாம்.

भग्नाशस्य करण्डपीडिततनोर्म्लानेन्द्रियस्य क्षुधा
कृत्वाखुर्विवरं स्वयं निपतितो नक्तं मुखे भोगिनः ।
तृप्तस्तत्पिशितेन सत्वरमसौ तेनैव यातः पथा
लोकाः पश्यत दैवमेव हि नृणां वृद्धौ क्षये कारणम् ।। 1.86 ।।

பக்னாஸஸ்ய கரணஇபிடிததனோர்மலா நேந்த்ரியஸ்ய சுதா
குர்த்வா **குர்**விவரம் ஸ்வயம் நிபதிதோ நகதம் மு**கே போகி**ன: /
த்ருப்தஸ்தத்பிஸிதேன ஸத்வரமஸௌ தேனைவ யாத: பதா
லோகா: பஸ்யத் **தை**வமேவ ஹி நிருணம் விரு**த்தௌ** க்ஷயே காரணம் // 1.86 //

தெளிவுரை:–

பாம்பாட்டியினால் பிடிக்கப்பட்ட பாம்பு ஒன்று ஒரு கூடைக்குள் இருந்து, வெளியேற முடியாமல், பசியினால் வாடி, உடல் இளைத்து, நம்பிக்கையிழந்து, சுருண்டு கிடந்தது. ஒரு நாள் எலியொன்று, இரவில், அக்கூடையைக் கடித்து, ஓட்டை செய்து, அந்த பாம்பின் வாயினுள், தானே வீழ்ந்தது. பாம்பும் அந்த எலியைத் தின்று பசியாறி, அதே ஓட்டை வழியாக, விரைவாக வெளியேறியது. காணீர், உலகோரே, மனிதனின் உயர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் விதியே காரணம்.

நம் செயல்கள், சில நேரங்களில், நாம் எதிர்பார்க்காத விளைவுகளை உண்டாக்குகின்றது. அதனைத்தான் விதியென்று கூறப்பட்டுள்ளது. எலியின் சாவுக்கும், அரவம் உயிர் பிழைத்ததற்கும், வேறு காரணம் கூற இயலாது.

कार्यायत्तं फलं पुंसां बुद्धिः कर्मानुसारिणी ।
तथापि सुधिया भाव्यं सुविचार्यैव कुर्वता ॥ 1.87 ॥

கர்மாயத்தம் **ப**லம் பும்ஸாம் **புத்தி**: கர்மானுஸாரிணீ ।
ததா**பி** ஸு**தி**யா **பா**வ்யம் ஸுவிசார்யைவ குர்வதா ॥ 1.87 ॥

தெளிவுரை:–

அவரவர்கள் செயல்களுக்குத் தகுந்தாற்போலவே, அதற்கான பலன்கள் கிடைக்கும். அதுவும், அவர்களது முன்வினைக்கு ஏற்பவே, அவர்களது பகுத்தறிவும் வேலை செய்யும். இவர்கள் இவ்வாறு மனம் போன போக்கிலேயே போவார்கள். இருப்பினும், விழித்துக் கொண்ட விவேகி மட்டுமே, அந்த எண்ணங்களை நன்கு ஆராய்ந்த பின்னரே அவனது செயல் இருக்கும்.

खल्वाटो दिवसेश्वरस्य किरणैः सन्तापितो मस्तके
वाञ्छन्देशमनातपं विधिवशात्तालस्य मूलं गतः ।
तत्राप्यस्य महाफलेन पतता भग्नं सशब्दं शिरः
प्रायो गच्छति यत्र भाग्यरहितस्तत्रैव यान्त्यापदः ॥ 1.88 ॥

கல்வாதோ **தி**வஸே ஸ்வரஸ்ய கிரணை: ஸந்தா**டி**தோ மஸ்தகே
வாஞ்**ச**ந்**தே**ஸம் அனாதபம் வி**தி**வஸாத்தாலஸ்ய மூலம் **க**த: /
தத்ராப்யஸ்ய மஹா**ப**லேன பததா **பக்**னம் ஸச**ப்த**ம் சிர:
ப்ராயோ **க**ச்**ச**தி யத்ர **பாக்**ய ரஹித ஸ்தத்ரைவ யாந்த்யாப**த**: // 1.88 //

தெளிவுரை:–

சூரியக்கதிர்களின் வெப்பம் ஒருவனது தலையில் ஏற, அதன் தாங்கமுடியாத சூட்டினால் பீடிக்கப்பட்டு, நிழலான இடம் தேடி, விதிவசமாக ஒரு பனை மரத்தடியில் சென்றான். அவ்வாறு, நிழலுக்காக அந்த பனைமரத்தின் அடியில் ஓய்வு எடுத்தவனின் தலையில் மரத்திலிருந்து ஒரு பெரிய பனம் பழமொன்று வீழ்ந்து, அவன் மண்டை உடைந்தது. ஆக, அதிருஷ்டம் இல்லாதவன், எங்கு சென்றாலும், ஆபத்து அவனுக்கு முன்பாக செல்கின்றது.

शशिदिवाकरयोर्ग्रहपीडनं गजभुजंगमयोरपि बन्धनम् /
मतिमतां च विलोक्य दरिद्रतां विधिरहो बलवानिति मे मतिः // 1.89 //

சஸி திவாகரயோர் **க்**ரஹபீ**ட**னம் **க**ஜ**பு**ஜம் **க**மயோரபி **ப**ந்**த**னம் /
மதிமதாம் ச விலோக்ய **த**ரி**த்**ரதாம் வி**தி**ரஹோ **ப**லவானிதி மே மதி: // 1.89 //

தெளிவுரை:–

கிரகங்களில் மிகவும் வலிமை வாய்ந்த சூரிய, சந்திரர்கள் சாதாரண கிரகங்களால் மறைக்கப்படுவதற்கான கிரகணம் ஏற்படுவதுப் போலவும், அவ்வாறே வவிமை வாய்ந்த யானை மற்றும் விஷம் கொண்ட பாம்பினை சாதரணமான மனிதன் அடக்கி கையாளுவதுப் போலவும், மிக உயரிய ஞானிகளை வறுமை வாட்டுவதைக்கண்டு, ஐயகோ! விதியே மிகவும் வலிமை வாய்ந்ததென நான் கருதுகின்றேன்.

सृजति तावदशेषगुणाकरं पुरुषरत्नमलङ्करणं भुवः /
तदपि तत्क्षणभङ्गि करोति चेदहह कष्टमपण्डितता विधेः // 1.90 //

ஸ்ருஜதி தாவ**த** ஸேஷ **கு**ணகரம் புருஷரத்னம் அலங்கரணம் **பு**வ: /
தத**ப**ி தத்க்ஷண**ப**ங்**கி** கரோதி சே**த**ஹஹ கஷ்டம் அபண்**டி**ததா வி**தே**: // 1.90 //

தெளிவுரை:–

இந்த பூமிக்கு அணிகலனாக அனைத்து நற்பண்புகளையும் உடைய மகான்கள் அல்லது ஞானிகள் மட்டுமே உண்மையான அலங்காரம் என்பதினால், அத்தகைய மனிதருள் மாணிக்கமாக திகழ்கின்ற உத்தமர்கள் சிலரின் குறுகிய ஆயுட்காலத்தைக் காணும்போது, ஐயகோ! கொடியது இந்த விதியின் வலிமை.

இந்த இடத்தில் விதி என்பது, படைக்கும் பிரம்மனைக் குறிக்கும். அதாவது, ஈஸ்வர சித்தம் அவனை வழி நடத்துகின்றது என்பதினால், இங்கு தனித்த மனம் ஈஸ்வர மனமாக உயருவதைத்தான் விழிப்புணர்வு அல்லது விழித்துக் கொண்ட விவேகம் என்கின்றோம். இந்த நிலையில் மட்டுமே விதியை மதியால் வெல்லலாம்.

अयममृतनिधानं नायकोप्योषधीनां
शतभिषगनुयातः शम्भुमूर्धावतंसः /
विरहयति न चैनं राजयक्ष्मा शशाङ्कं
हतविधिपरिपाकः केन वा लङ्घनीयः // 1.91 //

அயமம்ருத நி**தா**னம் நாயகோப்யோஸ்**தி**னாம்
சதா**பி**ஷ**க**னுயாத: சம்புமூர்தோவதம்ஸ: /
விரஹயதி ந சைனம் ராஜயக்ஷ்மா ஷஷாங்கம்
ஹதவிதிபரிபாக: கேன வா லங்கனிய: // 1.91 //

தெளிவுரை:–

சந்திரன் அமுதத்தின் உறைவிடமாயினும், மூலிகைகளுக்கெல்லாம் தலைவனாக இருப்பினும், (நூறு மருத்துவர்கள் எனப்படும்) அனைத்து மூலைகளுக்கும் மருத்துவ குணத்தைக் கொடுக்கும் தொடர்பினால், உயர்வாகக் கருதி, சிவனின் தலையணிகலனாகத் திகழ்ந்தாலும், அவனையும் காச நோய் போன்று தேய்மானம் விடுவதில்லை. ஆகவே, ஊழ்வினை நியமித்ததை யாரால்தான் மீற இயலும்?

மதியினுக்கு சோமன் என்றும் பெயர். சோமன் எனும் யாகத்தில் அமுதம் பெறப்படுவதாக கூறப்படும். இரவில்தான் சந்திரனின் ஒளியில் ஔடதங்கள் வளர்வதாகக் கருதப்படும்.

சதயம் என்பது வடமொழியில் **சதபிஷக்** எனப்படும்.

சந்திரனின் ஒளித்தாரைகள் கொண்டது என்பதினால், அது வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் தன்மையில், நூறு மருத்துவர்களால் பராமரிக்கப்படுவதாக இருந்தாலும், மதி தேய்வடைவது அதன் ஊழ்வினையே.

दैवेन प्रभुणा स्वयं जगति यद्यस्य प्रमाणीकृतं
तत्तस्योपनमेन्मनागपि महान्नैवाश्रयः कारणम् ।
सर्वाशापरिपूरके जलधरे वर्षत्यपि प्रत्यहं
सूक्ष्मा एव पतन्ति चातकमुखे द्वित्राः पयोबिन्दवः ॥ 1.92 ॥

தைவேன ப்ரபுணா ஸ்வயம் ஜகதி யத்யஸ்ய ப்ரமானிக்ருதம்
ததஸ்யோபனமேனமனாகபி மஹாநைவாஷ்ரய: காரணம் ।
சர்வாஸாபரிபூர்கே ஜல**த**ரே வர்ஷத்யபி ப்ரத்யஹம்
சூக்ஷமா ஏவ பதந்தி சாதகமு**கே** த்வித்ரா: பயோபிந்தவ: ॥ 1.92 ॥

தெளிவுரை:–

எல்லாம் வல்ல ஊழ்வினை என்பது, இந்த உலகில் படைக்கப்பட்ட யாவைக்கும் இப்படித்தான் இருக்க வேண்டும் என விதிக்கப்பட்ட நியதி எவ்வாறு தானாகவே நிர்ணயித்துள்ளதோ? அதன்படி அவைகளை வழி நடத்தும்.

இதில் இயற்கையின் வான்முகில் என்னதான் மிதமிஞ்சிய பெரு மழையாக இந்த பூமிக்கு நீர்த்துளிகளைக் கொட்டினாலும், அதில் ஒரு துளி மட்டும்தான் சிப்பிக்குத் தேவை என்பதுப்போல, ஒருவருக்கு அவரது ஊழ்வினைப்படி, என்ன கிடைக்க வேண்டுமோ? அதுமட்டுமே அவருக்கு கிடைக்கும்.

पत्रं नैव यदा करीरविटपे दोषो वसन्तस्य किं
नोलूकोऽप्यवलोकते यदि दिवा सूर्यस्य किं दूषणम् ।
धारा नैव पतन्ति चातकमुखे मेघस्य किं दूषणम्
यत्पूर्वं विधिना ललाटलिखितं तन्मार्जितुं कः क्षमः ॥ 1.93 ॥

பத்ரம் நைவ ய**தா** கரீரவிடபே **தோ**ஷோ வஸந்தஸ்ய கிம்
நோலூகோ(அ)ப்யவ லோகதே ய**தி** **தி**வா ஸூர்யஸ்ய கிம் **தூ**ஷணம் ।
தாரா நைவ பதந்தி சாதக மு**கே** மே**க**ஸ்ய கிம் **தூ**ஷணம்
யத்பூர்வம் வி**தி**னா லலாட லி**கி**தம் தன்மார்ஜிதும் க: க்ஷம: ॥ 1.93 ॥

தெளிவுரை:–

இலையுதிர்காலங்களில் மரங்களில் இலைகள் இல்லையென்பதும், பகலிலே ஆந்தைக்கு கண் தெரியவில்லை என்பதும், மழை நீர், சிப்பிக்குள் விழாமல் போவதும் யார் குற்றம்? எனவே, விதியினால் ஏற்கனவே எழுதப்பட்ட நியதியை யாரால் அழிக்க இயலும்?

नमस्यामो देवान्नु हतविधेस्तेऽपि वशगा
विधिर्वन्द्यः सोऽपि प्रतिनियतकर्मैकफलदः ।
फलं कर्मायत्तं किममरगणैः किं च विधिना
नमस्तत्कर्मभ्यो विधिरपि न येभ्यः प्रभवति // 1.94 //

நமஸ்யாமோ **தே**வான்னநு ஹதவி**தே**ஸ்தேபி வஸ**கா**
வி**தி**ர்வந்**த்**ய: ஸோபி ப்ரதினியதகர்மைக**பலத:** /
பலம் கர்மாயத்தம் ய**தி** கிம் அமரை: கிம் ச வி**தி**னா
நமஸ்தத் கர்ம**ப்**யோ வி**தி**ரபி ந யே**ப்**ய: ப்ர**ப**வதி // 1.94 //

தெளிவுரை:–

நம்மைவிட வலிமை வாய்ந்தவர்கள் தேவர்கள் என்பதினால், நாம் அந்த தேவர்களைத் தொழுகின்றோம். ஆனால், அவர்களும் விதிவசப்பட்டவர்களே என்பதினால், விதியே வலிமை வாய்ந்தது என்பதினால், உண்மையில் தொழத்தக்கது விதியே ஆகும்.

ஆனால், அந்த விதியும், அவரவர்கள் வினைக்குத் தகுந்த பயனையே வழங்குகின்றது என்பதைப் பார்க்கும்போது, அந்த வினைப் பயன்களை அப்படியே ஏற்கின்ற நிலையில், நமக்கு தேவர்கள்தான் எதற்கு? விதியும்தான் எதற்கு?

ஆகவே, விதியையும் வெல்ல இயலாத, அந்த வினைகளையே நாம் வணங்க வேண்டும் என்பதாக அல்லவா தோன்றுகின்றது?

விதி – படைக்கும் பிரமனைக் குறிக்கும் – ஊழ்வினையல்ல.

வினை – கரும வினை – நாம் இயற்றும் கருமங்களின்படியே நமது ஊழ்வினை அமையும்.

அதனை விதியினாலும் மாற்றி எழுத இயலாத நிலையில், நம்முடைய விழித்துக் கொண்ட விவேகத்தினால், பயனை எதிர்நோக்காமல், அனைத்து கருமங்களையும் நாம்

செய்வோமெனில், அதாவது பயனை இறைவனுக்கு அர்ப்பணிப்போமெனில், அந்தக் கருமமும் மனிதரைக் கட்டாது.

எனவே, செய்கின்ற செயலே உயர்ந்ததென்று இறுமாந்திருந்த மனிதர்களுக்கு பாடம் புகட்டவே சிவன் ஆண்டிக் கோலத்தில் (பிட்சாடனராக) வந்தாரென புராணங்கள் கூறுகின்றது.

ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे
विष्णुर्येन दशावतारगहने क्षिप्तो महासङ्कटे ।
रुद्रो येन कपालपाणिपुटके भिक्षाटनं कारितः
सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे // 1.95 //

ப்ரஹ்மா யேன குலால வன்னியமிதோ **ப்**ரஹ்மா**ட பாண்டோத**ரே
விஷ்ணுர்யேன **தசா**வதார **க**ஹனே க்ஷிப்தோ மஹா ஸனகடே /
ருத்**த்**ரோ யேன கபால பாணிபுடகே **பி**க்ஷாடனம் காரித:
ஸூர்யோ **ப்**ராம்யதி நித்யம் ஏவ **கக**னே தஸ்மை நம: கர்மணே // 1.95 //

தெளிவுரை:–

படைப்புக் கடவுளான பிரம்மனோ, ஓர் குயவனைப் போன்று, நியமிக்கப்பட்டபடி, இந்த பேரண்டமெனும் மிகப்பெரிய பாத்திரத்தினை வயிற்றினுள் வைத்துக் கொண்டுள்ளான். விஷ்ணுவோ, பத்து அவதாரங்களெடுத்து, படுபாதாளத்தில் ஒளிந்துக் கொண்டுள்ளான். உருத்திரனோ, மண்டையோட்டைக் கையிலேந்தி, பிச்சையெடுக்கின்றான். அதுப்போல, சூரியனோ தினந்தோறும் ஆகாயத்தில் வலம் வருகின்றான். எனவே, இவைகள் யாவற்றிற்கும் காரணமான கருமத்தினை வணங்குவோம்.

இவ்வுலகம், சீராகவும், ஒழுங்கினைக் கடைப்பிடித்தும் இயங்குகின்றது. இதனை வடமொழியில் ரிதம் (Rhythm) என்று கூறப்படும். இந்த ஒழுங்கினைத்தான் கருமமென இந்த செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

नैवाकृतिः फलति नैव कुलं न शीलं
विद्यापि नैव न च यत्नकृतापि सेवा ।
भाग्यानि पूर्वतपसा खलु सञ्चितानि
काले फलन्ति पुरुषस्य यथैव वृक्षाः // 1.96 //

நைவாக்ருதி: **ப**லதி நைவா குலம் ந சீலம்
வி**த்**யாபி நைவ ந ச யத்னக்ருதாபி ஸேவா /
பாக்யானி பூர்வதபஸா **க**லு ஸஞ்சிதானி
காலே **ப**லந்தி புருஷஸ்ய ய**தை**வ வ்ருக்ஷா: // 1.96 //

தெளிவுரை:–

ஒருவனது நல்லுருவமோ, பிறந்த குலமோ, அவனிடமுள்ள நற்பண்புகளோ, அவன் கற்ற கல்வியோ அல்லது அவனாக விரும்பி செய்த சேவைகளோ – எதுவுமே உண்மையில் மனிதனுக்குப் பயன் தருவதில்லை. அவனது முற்பிறவியில் செய்த செயல் விளைவுகளால் பெற்ற நல்வினைகள்தான் சரியான காலத்தில் சரியான பயனைத் தருகின்றது. அதாவது, மரங்கள் சரியான பருவத்தில் பழுத்த பழங்களைத் தருவதுப்போல மனிதனுக்கு அவனது வினைப்பலன்கள் சரியான பருவத்தில் பயன் தருகின்றது.

ஊழ்வினைகள் மூன்று வகைப்படும் – மொத்தம் சேர்த்த வினைகள் **சஞ்சிதம்**. அவற்றில் பயன் தரத் தொடங்கிவிட்ட வினைகள் **ப்ராரப்தம்,** இனி பயன் தரப்போகும் வினைகள் **ஆகாமியம்**.

இதில், இந்தப் பிறவியில் இப்போது பயன் தரத் தொடங்கிவிட்ட வினைகளால்தான் நமக்கு உடலாகவும், மனமாகவும், வாழ்க்கையாகவும் உள்ளது. அவைகளை நாம் அப்படியே அனுபவித்தே தீர வேண்டும்.

மீதமுள்ள எஞ்சிய இனி வரப்போகும் வினைப் பயன்களை, ஞானத்தினை அடைந்து, அழித்திட முடியும். ஞானத்தை அடையுமுன், இந்தப் பிறவியில் நாம் செய்யும் வினைகள் எல்லாமே, ஏற்கனவே உள்ள சஞ்சிதம் என்ற மொத்த வினைகளில் சேர்ந்துகொண்டே போகும். அந்த வகையிலே, ஞானம் அடைந்த பின்னரும், இந்த உடலும், உயிரும் இருக்கின்றவரை, வினைகள் பயன் தரத்தான் செய்யும். ஆனால், ஞானிகளைப் பொருத்த வரை, அவர்கள் அடைந்த விவேகத்தினால், அந்த செயல் விளைவுகள் எல்லாம் நிஷ்காமிய கர்ம பலன்களாக மாறி, இவைகள் எதுவும் இனி அவர்களை பாதிக்காது.

वने रणे शत्रुजलाग्निमध्ये महार्णवे पर्वतमस्तके वा ।
सुप्तं प्रमत्तं विषमस्थितं वा रक्षन्ति पुण्यानि पुरा कृतानि ॥ 1.97 ॥

வனே ரணே சத்ரு ஜலா**க்**னி ம**த்**யே மஹார்ணவே பர்வத மஸ்தகே வா /
ஸுப்தம் ப்ரமத்தம் விஷமஸ்**தி**தம் வா ரக்ஷந்தி புண்யானி புரா க்ருதானி // 1.97 //

தெளிவுரை:–

ஒருவனது கடுமையான காட்டு வழியிலோ, பகைவர்கள் மத்தியிலோ, நீர் மற்றும் நெருப்பைக் கையாளும் போதோ, ஆழமான பெருங்கடலிலோ அல்லது உயரமான மலை உச்சியிலோ, உறங்கும் போதோ, அல்லது விழித்திருக்கின்ற கவனமற்ற நிலையிலோ ஏற்கனவே தான் செய்த நல்வினைகளே அவனைக் காக்கின்றன.

या साधूंश्च खलान्–करोति विदुषो मूर्खान्हितान्द्वेषिणः
प्रत्यक्षं कुरुते परोक्षममृतं हालाहलं तत्क्षणात् ।
तामाराधय सत्क्रियां भगवतीं भोक्तुं फलं वाञ्छितं
हे साधो व्यसनैर्गुणेषु विपुलेष्वास्थां वृथा मा कृथाः ॥ 1.98 ॥

யா ஸா**தூ**ம்ஸ்ச **க**லான்கரோதி வி**து**ஷோ மூர்**கான்** ஹிதாந்**த்**வேஷிண:
ப்ரத்யக்ஷம் குருதே பரீக்ஷம் அம்ருதம் ஹாலாஹலம் தத்க்ஷணாத் /
தாம் ஆரா**த**ய ஸத்க்ரியாம் **பக**வதீம் **போக்**தும் **ப**லம் வாஞ்**சி**தம்
ஹே ஸா**தோ** வ்யஸனைர் **கு**ணேஷு விபுலேஷ் வாஸ்**தாம்** வ்ரு**தா** மா க்ரு**தா**: // 1.98 //

தெளிவுரை:–

ஓ மேன்மக்களே! தீயவர்களையும், நல்லோராகவும், அறிவிலிகளையும் அறிஞர்களாகவும், பகைவரையும் நண்பராகவும், கண்ணுக்குத் தென்படாததை, நேரில் தெரிவதாகவும், கொடிய ஆலகால நஞ்சினையும், அமுதமாகவும் மாற்றிக் காட்டுகின்ற மகத்தான உங்களது உயர்ந்த நல்வினைகளெனும் பகவதியைக் கொண்டு, விரும்பிய அனைத்தையும் அடைய வழிபடுவீராக. மற்ற பல குணங்களில் வீணாக நம்பிக்கை வைக்காதீர்.

गुणवदगुणवद्वा कुर्वता कार्यमादौ
परिणतिरवधार्या यत्नतः पण्डितेन ।
अतिरभसकृतानां कर्मणामाविपत्तेर्–
भवति हृदयदाही शल्यतुल्यो विपाकः ॥ 1.99 ॥

குணவ**த** **கு**ணவ**த்**வா குர்வதா கார்யஜாதம்
பரிணதிரவ**தா**ர்யா யத்னத: பண்**டி**தேன /
அதிர**ப**ஸக்ருதானாம் கர்மணாம் ஆவிபத்தேர்
பவதி ஹ்ரு**த**ய**தா**ஹீ சல்யதுல்யோ விபாக: // 1.99 //

தெளிவுரை:–

நல்லதோ, கெட்டதோ, ஒரு செயலைத் தொடங்குமுன், ஓர் அறிவாளி, அதன் விளைவுகளை நன்கு ஆராய்ந்து செயல்படவேண்டும். அவசரத்தில் செய்த செயல்கள், சாகும்வரை, ஓர் அம்பைப் போன்று உள்ளத்தினை வருத்துவதாக இருக்கும். ஆகவே, நமது குணம் எந்த நிலையில், எப்படி வெளிப்படுகின்றது என்பதை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

भीमं वनं भवति तस्य पुरं प्रधानं
सर्वो जनः सुजनतामुपयाति तस्य
कृत्स्ना च भूर्भवति सन्निधिरत्नपूर्णा
यस्यास्ति पूर्वसुकृतं विपुलं नरस्य // 1.100 //

பீமம் வனம் **ப**வதி தஸ்ய புரம் ப்ர**தா**னம்
ஸர்வோ ஜன: ஸ்வஜனதாம் உபயாதி தஸ்ய /
க்ருத்ஸ்னா ச **பூர்ப**வதி ஸன்னி**தி**ரத்னபூர்ணா
யஸ்யாஸ்தி பூர்வ சுக்ருதம் விபுலம் நரஸ்ய // 1.100 //

தெளிவுரை:–

எந்த மனிதனுக்கு அவன் செய்த நல்ல செயல் விளைவுகளால், முந்தைய நல்ல வினைகள் நிறைய உள்ளனவோ, அவைகளெல்லாம் இப்போது நன்மை செய்யத் தொடங்கும். அந்த வகையிலே, அந்த நல்லவனுக்கு மிகக் கொடிய காடும் தலைநகரமாகும். அனைத்து மக்களும் அவனுக்கு நல்ல உற்றார், உறவுகளாக மாறுவர். இந்த ஒட்டுமொத்த பூமியும், அவனைப் பொருத்தவரை செல்வமும், இரத்தினங்களும் செழிப்பாக இருக்கின்ற சுகமாக வாழும் சொர்கமாக மாறும்.

ஓம் தத் ஸத்!

பர்த்ருஹரி அருளிய

நீதி சதகம்

ப்ரக்ஞன்